# தேயிலைச் சாயம்





# தேயிலைச் சாயம்

**தேயிலைச் சாயம்**

முதற் பதிப்பு : டிசம்பர் 2021

ISBN : ISBN 978-624-5914-09-8

பதிப்பாசிரியர் : லயனல் குருகே

பக்க வடிவமைப்பு : வாக்யா ரூ

வெளியீடு : மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்

பதிப்புரிமை பெற்றது. வெளியீட்டாளர்களின் முன்அனுமதியின்றி இந்நூல் முழுமையாகவோ அதன் ஒரு பகுதியை உள்ளடக்கியோ மீள் பிரசுரம் செய்யவது தடை செய்யப்பட்டுள்ளது. இந்நூலின் படங்களை உள்ளடக்கி அச்சிடவோ எழுத்துமூலமோ அல்லது இலத்திரனியல் போன்ற எத்தகைய ஊடகத்தின் மூலமோ பிரதி செய்தல் வெளியிடுதல், ஒலிபரப்புச் செய்தல், முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மொழிமாற்றம் செய்து, போலியாகத் தயாரித்து விற்பனை செய்தல், விநியோகம் செய்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதோடு மேற்படி நடவடிக்கைகள் சட்டவிரோதமானவையாகும்.

இந்நூலின் பக்கம் 133-153 வரை பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரைகளானது “தேயிலைச் சாயம் புகைப்படக் கண்காட்சி தொடர்பில் ஊடகவியலாளர்கள் புத்திஜீவிகள் மற்றும் வெவ்வேறு எழுத்தாளர்கள் முன்வைத்த கருத்துக்களை உள்ளடக்கிய கட்டுரையாகும். இக் கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு சொந்தக்காரர்கள் இவ் எழுத்தாளர்களே. இக்கருத்துக்களானது CPA அல்லது GIZ நிறுவனத்தின் கருத்துக்கள் அல்ல.

மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் அதனுடன் இணைந்த பிரச்சினைகள் மீது அவதானம் செலுத்தும். பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாஷனைக்கு சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கை காரணமாகவும், 1996 இல் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அமைக்கப்பட்டது. பொது மக்கள் மீதான கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல் மாற்று வழிகளை இனங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றிற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தன்னை அர்ப்பணித்துள்ளது.

| | |
|---|---|
| முகவரி | : 6/5, லெயாட்ஸ் வீதி, கொழும்பு–05 |
| தொலைபேசி | : +94112081384, +94112081385,+94112081386 |
| ஃபக்ஸ் | : +94112081388 |
| மின்னஞ்சல் | : info@cpalanka.org |
| இணையதளம் | : www.cpalanka.org |
| முகநூல் | : www.facebook.com/cpasl |
| ட்விட்டர் | : @cpasl |

# உள்ளடக்கம்








7 'தங்கம்' பறித்துத் தரும்
மக்களின் வேதனை
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

9 முன்னுரை
தேயிலைச் சாயம் புகைப்படப் புத்தகம்
திரு. டெனி ஷைபி

11 **முன்னுரை**
**தேயிலைச் சாயம் புகைப்படப் புத்தகம்**
திரு. ஹொல்கர் சேவ்பர்ட்

13 **'தேநீர் சுவையில் மறைந்து போன கண்ணீர்க் கதை'**
லயனல் குருகே

15 **புகைப்பட மொழியை சரியாகப் புரிந்து கொண்ட திறமைசாலிகளின் கதை**
நதிஷ்க ரணசிங்க / அஜித் செனவிரத்ன

17 **புகைப்படச் சுற்றுலா**

119 **தேயிலைச் சாயம்**
**தனிச் சிறப்புமிக்க புகைப்படக் கலைஞர்கள் தமது, கதைகளை எமக்காக கொணர்ந்து தருகின்றனர்.**

















133 **‘தேயிலைச் சாயம்’ பற்றி ஓரிரு வார்த்தைகள்**
பேராசிரியர் சசங்க பெரேரா

137 **தேயிலைச் சாயம் – வேதனை மீதான கலைக்கண் பார்வை**
ஊடகவியலாளர் லசந்த த சில்வா

141 **உங்கள் தேநீர் கோப்பையில் கண்ணீர்**
சந்திரிகா காடியவசம் / நதீஷா பவுலிஸ்

145 **மலையகத்தின் மனச்சாட்சி**
கே. பிரசன்னா

149 **தேயிலைச் சாயம் அன்பின் பின்புலக் கதை**
லஹிரு கிதலகம

167 **கருத்துத் துளிகள்**

# ‘தங்கம்’
## பறித்துத் தரும் மக்களின் வேதனை

மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளினால் நடாத்தப்பட்ட ‘‘தேயிலைச் சாயம்’’ புகைப்படக் கண்காட்சியை நடாத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமை பற்றி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தைச் சார்ந்த நாம் உண்மையில் பெருமிதம் அடைகின்றோம். இவ் உறுப்பினர்கள் அன்றாட வாழ்வில் தமது சமூகம் எதிர்நோக்கும் கஷ்டங்கள் மற்றும் துன்பங்களை அவதானிப்பவர்களாக காணப்படுகின்றார்கள் என்பதை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

இலங்கை தனது தேயிலைக் கைத்தொழில் தொடர்பாக பெருமையடைவதைப் போன்றே ‘‘சிலோன்’’ என்ற பெயர் பல ஆண்டுகளாக தேயிலையுடன் இரண்டறக் கலந்த ஒரு வார்த்தைப் பிரயோகமாகவே காணப்படுகின்றது. எவ்வாறாயினும் இலங்கையில் இந்த ‘‘தங்க’’ அறுவடையினை ஈட்டித் தந்த மக்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அனுபவித்து வரும் வாழ்க்கை நிலைமைகளே, புகழ் மிக்க வர்ணனைகளுக்கும் நல்வாழ்த்துக்களுக்கும் பின்னால் உள்ள யதார்த்தமாகக் காணப்படுகின்றது. அவர்களது துன்பகரமான வாழ்க்கை நிலைமைகள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக மாற்றங்கள் ஏதுமின்றி தற்போதும் காணப்படுவது கவலைக்குரியது என்ற போதிலும் அதுவே உண்மை நிலைமையாக உள்ளது. அவர்களது சம்பளங்கள், தேவைகள் நியாயமான நிலைமையை விட மிகவும் குறைந்த நிலையிலேயே உள்ளன. பல்வேறுபட்ட மக்களைக் கொண்ட, வேற்றுமையில் ஒற்றுமை நிலவும் நாடு என்ற வகையில் இலங்கை முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமாயின் தோட்டத் தொழிலாளர்களின் இந்த வாழ்க்கை நிலைமைகள் தொடர்பாக கட்டாயம் தீவிர கவனம் செலுத்தப்படல் வேண்டும். 3000 தோட்டத் தொழிலாளர்களுக்கு தபால் முகவரிகளை வழங்குவதற்கான ஓர் ஆரம்பத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமாகிய எம்மால் இயலுமாக அமைந்தது தொடர்பில் நாம் பெருமையடைவதைப் போன்றே, அது தொடர்பான ஒரு கவலையும் எம்மிடம் காணப்படுகிறது. தபால் மூல கடிதங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுவதில் ஏற்படுகின்ற

தாமதங்கள் காரணமாக ஏற்படும் பாதகமான விளைவுகளைத் தடுக்கும் நடைமுறை ரீதியான சிக்கல்களுக்கு மேலதிகமாக தபால் முகவரி ஒன்று காணப்படுவதற்கான கௌரவம் உண்மையில் அனைத்து இலங்கைப் பிரஜைகளுக்கும் உரித்தாக்கப்பட வேண்டிய உரிமை ஆகும்.

இக் கண்காட்சியின் போது அச் சமூகத்தின் இளம் சமுதாயத்தோடு இணைந்து பணியாற்றக் கிடைத்தமை தொடர்பில் நாம் பெருமையடைகின்றோம். தேயிலைத் தோட்ட மக்களது வாழ்வின் அன்றாட யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அவற்றை எதிர்கால உலகிற்கு உரித்தாக்கக் கூடிய வகையில் அறிக்கையிடக் கூடியவர்கள் வேறு யாராக இருக்க முடியும்? அவ்வாறு பங்களிப்புச் செய்த இளைஞர் யுவதிகளின் திறமைகள் பாராட்டப்படக் கூடிய மட்டத்தில் அமைந்திருப்பதுடன் எதிர்காலத்தில் அவை மேலும் வளர்க்கப்படவும் வளரவும் வேண்டும் என நான் நினைக்கின்றேன். மேலும் இந்த மக்கள் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அரசியல் அர்ப்பணிப்பை உருவாக்கக் கூடிய கலந்துரையாடலொன்று இக்கண்காட்சியின் மூலம் உருவாகலாம் என்பது எனது மனப்பூர்வமான எதிர்பார்ப்பாகும். எமது மக்கள் கருத்துக் கணிப்பாளர்களும் தீர்மானம் மேற்கொள்வோரும் அவர்களின் முயற்சிகளின் போது மனிதர்களுக்கான கௌரவத்தை ஒரு உந்துசக்தியாக அனைத்துக்கும் மேலாக நிலைநிறுத்தி செயற்படுவார்கள் என நாம் அதிகம் எதிர்பார்க்கின்றோம்.

“அவிசாயி மாகலிட்” என்பவர் பண்பும் நாகரீகமும் நிறைந்த ஒரு சமூகம் பற்றி தெளிவுபடுத்தும் போது அது நிறுவனங்கள் மக்களை அவமானத்திற்கு உட்படுத்தாததும் மக்கள் ஒருவரையொருவர் அவமானத்திற்கு உட்படுத்திக் கொள்ளாததுமான சமூகம்’ என அமைதல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார். தோட்டங்களின் நிலைமைகளை அபிவிருத்தி செய்யும் போதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டிய ஒரு உண்மை இதன் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. அது மாத்திரமன்றி எமது நாட்டை ஒன்றுபட்டதும் சுபீட்சமானதுமான தேசமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு முயற்சியின் போதும் இது ஏற்புடையதாகின்றது.

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**
நிறைவேற்றுப் பணிப்பாளர்,
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# முன்னுரை

## தேயிலைச் சாயம் புகைப்படப் புத்தகம்

ஆடைத்தொழில் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுடன் இணைந்து இலங்கையின் பெருந்தோட்ட சமூகங்கள் இலங்கைப் பொருளாதாரத்தின் பிரதான உழைப்பாளர்படையின் முதல் மூன்று இடங்களையும் வகிக்கின்றன. ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தின் சிக்கலான தன்மையும் அவர்கள் மத்தியில் காணக்கிடைக்கின்றன. வியாபாரம் சார்ந்த நிபந்தனைகள் மூலம் தொடர்ந்தும் பிரதிபலிக்கச் செய்யும் வகையில் இது ஐரோப்பாவினால் தீர்வு காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும் ஒரு பிரச்சினை ஆகும். அனைவரையும் உள்ளடக்கும் வியாபாரத்தின் மூலம் பூகோளச் சந்தைகளின் நன்மைகளை அனுபவிப்பதற்கு அதிகளவு எண்ணிக்கையிலான நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. வளர்ச்சி சந்தர்ப்பங்கள் ஊடாக அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதற்கும், வறுமை நிலைக்குத் தீர்வு காண்பதற்கும் மற்றும் சகவாழ்வு நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் முடிகின்றமையினால் ஐரோப்பாவானது வியாபாரத்தில் முன்னிலை வகிக்கிறது.

உண்மையிலேயே வியாபாரத் தாராளமயம் மூலம் தனது பங்காளர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதை உறுதிசெய்யும் வகையில் ஜீஎஸ்பி + தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயங்களுக்கு இசைவடைதல் உள்ளடங்களாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அதன் உறுப்பு நாடுகள் தனது வியாபாரத் தேவைப்பாடுகளை இற்றைப்படுத்துகிறது. இருப்பினும் அது போதுமானது அல்ல. வியாபாரம் மூலமான நன்மைகள் தன்னிச்சையாகக் கிடைப்பதில்லை. அதன் அனுகூலங்களை தொழிலாளர்களுக்கும் ஒட்டுமொத்த சமூகத்துக்கும் உரித்தாக்குவதற்கான கொள்கைகள் வகுக்கப்படல் வேண்டும். மானுட அபிவிருத்தி தொடர்பில் ஏற்கனவே இலங்கை மீதான சாதகமான விளைவுகள், கல்வி, வேலை வாய்ப்பு வழங்க முடியாமை, வறுமை நிலை மற்றும் தனிப்பட்ட கடன்கள் பெற்றுக் கொள்ளல் ஆகியவற்றின்

போது சமூகங்களின் தேவைப்பாடு தொடர்பாக சமூகக்கட்டமைப்புகளில் காணப்படும் அமைப்பு ரீதியிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதன் மூலம் மேலும் விருத்தி செய்ய முடியும்.

ஐரோப்பாவிற்கும் இலங்கைக்கும் இடையே உள்ள இவ் இருவகையான சவால்கள் இப் புகைப்படங்கள் மூலம் பிரதிபலிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் பெருந்தோட்ட சமூக அங்கத்தவர்களினது வாழ்க்கை அனுபவங்கள் தொடர்பானதாக அமையப்பெற்றுள்ளன. இச் சேர்க்கையின் மூலம், இப்புகைப்படங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பலதரப்பட்ட மக்களது சிக்கல் நிறைந்த வாழ்க்கை தொடர்பான ஒரு சிறிய பகுதி உள்ளடக்கியபோதும், சேர்த்துக் கொள்ளல் என்பது இலங்கைக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது? என்பதனைப் பிரதிபலிப்பதற்காக இப்படங்கள் மூலம் ஊக்குவிக்கப்படுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு அச்சிடப்பட்ட திரட்டில் காணப்படாத புகைப்படங்கள் உள்ளடங்களாக புகைப்படங்களில் தோன்றி தமது வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு விருப்பம் தெரிவித்த சமூக அங்கத்தவர்களுக்கு நாம் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இப் புகைப்படங்கள் மற்றும் கதைகளை அணுகுவதற்கு பாரிய எண்ணிக்கையான பார்வையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் வளர்ந்து வரும் இப் புகைப்படக் கலைஞர்கள் தமது சமூகத்தின் குரலை ஓங்கச் செய்து வருகின்றனர்.

இப்புகைப்படத் திரட்டல், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் சமஷ்டி வெளிநாட்டு அலுவலகம் ஆகியவற்றின் சம இணை நிதி அனுசரணையின் கீழ் இலங்கையின் நல்லிணக்கச் செயன்முறையினை பலம்பொருந்தச் செய்யும் கருத்திட்டத்தின் ஓர் ஆரம்பம் ஆகும்.

நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையின் முக்கிய விடயங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம், அரச சார்பற்ற மற்றும் அடிமட்ட பங்காளிகளுக்கு நல்லிணக்க செயன்முறையினை பலப்படுத்துவதற்கான கருத்திட்டம் துணை புரிகிறது. நடைமுறைப்படுத்தும் பங்காளிகளான 'Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ)" (ஜீ ஐ இசட்), "ஜீ எம் பி எச்" GmbH மற்றும் பிரித்தானிய கழகம் (British Council); போன்றே மலைநாட்டு தமிழ் சமூகத்துக்கான மதியுரை தொடர்பில் அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் பணிகளுக்காக "மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்" , ஊவா சக்தி நிறுவனம், சுவசக்தி நிறுவனம் ஆகியவற்றுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

**திரு. டெனி ஷைபி,**

தூதுவர், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு

# முன்னுரை
## தேயிலைச் சாயம் புகைப்படப் புத்தகம்

இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புகின்ற பணிகளில் ஈடுபடுவோரிடம் புதிதாக இப்பணிகளில் பிரவேசிப்போர் அடிக்கடி வினவுகின்ற ஒரு கேள்வி உண்டு. " நீங்கள் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வேலை செய்கின்றீர்களா?" என்பதே அது. மலையகத்தை மையமாகக் கொண்டு புகைப்படக் கலையை ஆரம்பிப்பதற்கு நல்லிணக்க நிகழ்ச்சித்திட்டங்கள் ஏன் உதவ வேண்டுமென ஒருசிலர் கேள்வி எழுப்ப முடியும். எல்லாவற்றையும் விட பல தசாப்த காலமாக நிலவிய இலங்கையின் சிவில் யுத்தத்தின் போது மலையகத் தமிழ் மக்கள் நேரடியாக ஒரு பாத்திரத்தை வகிக்கவில்லை.

இருப்பினும் சமாதானம் நிலையானதாக இருக்க வேண்டுமாயின் அது அனைவரையும் இணைத்துக்கொண்ட ஒன்றாக அமைய வேண்டும். பல தசாப்த காலமாக மேற்கொண்ட ஆதரித்து வாதாடுதல் மற்றும் ஓரங்கட்டுதல் என்பவற்றின் பின்னர் 21 ஆம் நூற்றாண்டின் போதே பிரசாவுரிமை கிடைக்கப்பெற்ற நபர்கள் உள்ளிட்ட அனைத்து சமூகங்களுக்கும் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதற்கான சந்தர்ப்பம் கிட்ட வேண்டும். இதனையே “நேர்மறை சமாதானம்” என அழைக்கின்றோம். அது யுத்தம் இல்லாத நிலைமையை விடவும் மேலானது.

வழமைக்கு மாற்றமான இப் புகைப்படத் திரட்டினைப் பொருத்த வரை இலங்கையின் நல்லிணக்கச் செயன்முறையைப் பலப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இவ் இளம் தலைமுறையினரின் பயணத்துக்கு உதவி செய்தமை தொடர்பாக நாம் பெருமைப்படுகின்றோம். ஐரோப்பிய ஒன்றியமும் ஜேர்மன் அரசாங்கமும் அதற்கான இணை அனுசரணையாளர்களாக செயற்பட்டன. இவ்வாறான கலை மற்றும் கலாசாரத்திற்கான ஆரம்பத்தின் ஊடாக சமூகங்களை உரையாடல்களில் ஈடுபடுத்துவதன் மூலம் நல்லிணக்கத்தைப் பலப்படுத்தும் செயன்முறை மற்றும் அதன் பங்காளிகள், மக்கள் என்போர் ஊடாட்டத்தில் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதே சமயம், தமது

கருதுகோள்களை  திறனாய்வு ரீதியில் பிரதிபலித்தல் மற்றும் சவாலுக்கு உட்படுத்தல், பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்தல், அமைதியான முறைகளைப் பயன்படுத்தல் மற்றும் அனைத்து நபர்களையும் உள்ளடக்கிய சமூகங்களை கட்டியெழுப்புதல் என்பன இந்நடவடிக்கைகளின்போது உள்ளடக்கப்பட்டன.

சமூக கருத்தாடல் முன்னெடுப்புகளுக்கு மேலதிகமாக, ஆய்வுகள், ஊடகம் மற்றும் வரலாறு பற்றிய கருத்தாடல் செயற்பாடுகளினூடாக நல்லிணக்க விடயங்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான, நன்கு அறியப்பெற்ற மக்கள் கலந்துரையாடல்களை மேம்படுத்தல், மோதல்களினால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த காலங்களோடு கையாழுகை செய்யவும் மற்றும் நிகழ்காலத்தில் தினசரி முகம் கொடுக்கும் சவால்களை சமாளிக்கவும்  உதவி புரியும் வகையில் தரமான உளச் சமூக ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான  வழிவகைகளை அதிகரித்தல், காவல் மற்றும் சுகாதாரம் போன்ற முக்கியமான துறைகளில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் இரு மொழிகளிலும் தமது சேவையை வழங்க உதவுதல் போன்றவைகளையும் நல்லிணக்க செயன்முறைகளை பலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமானது மேற்கொள்கிறது.

திரட்டில் காணக் கூடியதாயுள்ள புகைப்படங்களின் அமைப்பு, வர்ணம் மற்றும் அலகு, அதன் மூலம் பிரதிபலிக்கும் காட்சிகள் மற்றும் நபர்கள், அதன் மூலம் எடுத்துரைக்கும் நேர்மறை அல்லது சவால்கள் நிறைந்த உணர்வுகள் மற்றும் கருத்துக்களைப் பாராட்டுவதற்கு நாம் வாசகர்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். அவர்களது ஊகங்களைப் பிரதிபலிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ளுமாறு, அனைத்து இலங்கையர்களுக்கும் அமைதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய எதிர்காலத்துக்காக பங்களிப்புச் செய்வதனை ஊக்குவிப்பதற்கு நாம் வாசகர்களுக்கு மேலும் அழைப்பு விடுக்கின்றோம்.

**திரு. ஹொல்கர் சேவ்பர்ட்,**

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைத் தூதுவர்

# ‘தேநீர்
## சுவையில் மறைந்து போன கண்ணீர்க் கதை’

“நீங்கள் புத்தகம் ஒன்றை வாசிக்கும் போது, சினிமாப் படம் ஒன்றைப் பார்க்கும் போது அல்லது ஓய்வாக இருக்கும் போது ஒரு கோப்பைத் தேனீரைச் சுவைப்பதுண்டா? அது உங்களுக்கு எவ்வளவு இனிமையையும் இதத்தையும் கொண்டு வருகின்றது? ஆனால், அவ்வாறானதொரு சுவையான தேநீர் கோப்பைக்குள் புதைந்து கிடக்கும் கண்ணீர் கதை உங்களுக்குத் தெரியுமா? அந்த தேநீர் கோப்பைக்காக உழைத்துக் களைத்த சகோதர மக்களைப் பற்றி ஒரு கணமேனும் நீங்கள் சிந்தித்ததுண்டா? அந்த சுவையான தேநீர்க் கோப்பைக்குள் புதைந்து போயுள்ள அவர்கள் வாழ்க்கை பற்றிய கதையையே நாம் கொண்டு வருகின்றோம்.’

மலையக தமிழ் மக்கள் இந்த நாட்டுக்கு வருகை தந்த நாள் முதல் இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றி வரும் பங்களிப்பு விலைமதிக்க முடியாத அளவுக்கு விசாலமானது.

இலங்கையை இந்த உலகம் ‘சிலோன் ரீ’ எனும் இலங்கைத் தேயிலை உற்பத்தியைக் கொண்டே இனங்காண்கின்றது. ஆயினும் இன்னமும் தேயிலைக் கொழுந்து பறித்தல், கவ்வாத்து வெட்டுதல், உரம் இடுதல் போன்ற அனைத்து உற்பத்தி செயன்முறைக்கும் பங்களிப்புச் செய்யும் மலையக தமிழ் சமூகத்தின் வாழ்க்கையோ உயர்நிலையை அடையவில்லை. அரசியல், பொருளாதாரம், மற்றும் சமூக ரீதியான பல்வேறு விடயங்களில் அவர்களுக்குரிய அந்தஸ்து இதுவரை கிடைக்கப் பெறவில்லை. அந்த இடம் அவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். சிறப்புரிமைகளுடனான பிரஜா உரிமைகளை வென்றெடுக்கத் தேவையான வலிமை அவர்களிடமுள்ளது.

இந்த சகோதர மக்களுக்காக எழுதப்பட்டுள்ள கவிதைகளும் பாடல்களும் மற்றும் பல்வேறு ஆக்கங்களும் பல உள. அவ்வாக்கங்களிடையே அனுதாப ரீதியான எண்ணங்களைக் கொண்ட படைப்புகளைப் போன்றே, அரசியல் மறுசீரமைப்புக்கான சமூக சிந்தனைகளை விரிவாக்கக் கூடிய

ஆக்கங்களும் உள்ளன. மலையக மக்களின் வாழ்க்கையின் குறுக்குவெட்டுத் தோற்றத்தை சமூகத்திற்குக் காணப்பிப்பதே இந்த புகைப்படங்களின் முக்கிய நோக்கம். அதாவது அவர்களுடைய சமூக, அரசியல், பொருளாதார, மற்றும் கலாசார வாழ்வியல் தொடர்பில் ஒரு உணர்வை ஏற்படுத்தி அவர்களுடைய வாழ்வின் யதார்த்தங்களை பிரதிபலிப்பதாகும்.

மலையகப் பிரதேசத்தின் தெரிவு செய்யப்பட்ட நான்கு தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளினால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. நுவரெலியா மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து ஹொலிரூட் மற்றும் லொஹி தோட்டங்கள், பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்து எட்டம்பிட்டிய மற்றும் ஊவா ஹய்லன்ஸ் தோட்டங்களின் இளைஞர் யுவதிகள் இதில் கலந்து கொண்டார்கள்.

சுமார் இரண்டு ஆண்டுகளாக சில செயலமர்வுகள் மூலம் புகைப்படப் பிடிப்பு தொழில்நுட்ப அறிவையும் கலை மற்றும் சமூக அரசியல் அறிவையும், சமூக மாற்றத்திற்கான வன்முறையற்ற கலைப் பயன்பாடு தொடர்பான அறிவைப் பெற்றுக் கொண்ட இவ்விளைஞர்கள் அவர்களது வாழ்க்கை முறையை அவர்களே கமரா வில்லைகளுக்குள் வசப்படுத்தியுள்ளார்கள்.

இது ஓர் ஆய்வு ரீதியான நிகழ்ச்சித் திட்டம்

சமூகம் பற்றிய உணர்வை இளைஞர் யுவதிகளுக்கு வழங்கி அவர்களது வாழ்க்கை தொடர்பில் காணப்படுகின்ற யதார்த்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிறந்த சமூக வாழ்வினை ஏற்படுத்துவதற்குத் தேவையான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அது காரணமாக அமையலாம்.

அவ்வாறே அப் புகைப்படங்களை பார்வையிடும் உங்களுக்கு, மலையக தமிழ் மக்களுடைய வாழ்வின் மீது மூன்றாவது கண்கொண்டு அவதானிப்பதன் ஊடாக அதுபற்றிய உணர்வைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உருவாகின்றது.

மலையகத்தின் இளைஞர் யுவதிகளும் அவர்களுடைய மக்களுமே இச்செயற்பாட்டை வெற்றியடையச் செய்வதற்கு முன்னணி பங்களிப்பு வழங்கினார்கள்.

ஊவா சக்தி நிறுவனம் மற்றும் சுயசக்தி நிறுவனம் ஆகியன சகோதர நிறுவனங்கள் என்ற ரீதியில் இச் செயற்பாட்டில் கைகோர்த்தன. அவ்வாறே இளைஞர் சமூகத்துடன் இணைந்து அவர்களுக்கு புகைப்படக்கலை தொடர்பான தொழில்நுட்ப அறிவை புகழ்பெற்ற புகைப்படக் கலைஞர்களான திரு. அஜித் செனவிரத்ன மற்றும் திரு. நதிஷ்க ரணசிங்க ஆகியோர் வழங்கினர்.

**லயனல் குருகே**
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# புகைப்பட

## மொழியை சரியாகப் புரிந்து கொண்ட திறமைசாலிகளின் கதை

இது ஒரு புதுவிதமான கதை. அதனை மலையகத்தின் சில அழகிய இளைஞர்களும் யுவதிகளும் எழுதினார்கள். பெரும்பாலானவர்கள் தமிழர்கள், சிலர் சிங்களவர்கள். இன்னும் சிலர் முஸ்லிம்கள்.

எங்களுக்கு தமிழ் புரியாது. அவர்களில் பெரும்பாலானோருக்கு சிங்களம் புரியாது. ஆகவே எமது தொடர்பாடல் மொழியாக "புகைப்படக் கலை" விளங்கியது. முதலில் கோட்பாட்டு ரீதியான அவர்களின் அறிவை வளர்க்க நேர்ந்தது. அவர்களில் பலர் டிஜிட்டல் கமரா ஒன்றைத் தொட்டும் இருக்கவில்லை. அவ்வாறே சிலர் நேரில் பார்த்தது கூட இல்லை.

கமராவின் தொழில்நுட்பப் பின்னணியையும் அதன் தொழிற்பாட்டையும் பற்றிய மூன்று நாள் பயிற்சியின் பின்னர், நடைமுறைப் பயிற்சிகளுக்காக நாம் நூற்றுக் கணக்கான மைல்களை கொட்டும் பனியில், கொழுத்தும் வெயிலில், பெருமழையில், பக்கம் பக்கமாக எழுதும் அளவுக்கு உள்ளங்களில் உருவான உணர்வுகளைப் புகைப் படங்களில் சிக்க வைப்பதற்காக நடந்து திரிந்தோம். புகைப்படமொன்றை நிருமாணிப்பதென்பது, எளிமையான தோற்றமுடைய சிக்கலான பணி என்பதை அனைவரும் மெல்ல மெல்லப் புரிந்து கொண்டனர்.

புகைப்படம் எடுக்கும் முறையைப் பற்றிய ஒவ்வொரு விடயத்தையும் தனித்தனியே சொல்லித்தர நாம் முயற்சிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் எடுத்த புகைப்படங்கள் பற்றிய பல்வேறு வகையான கதைகள், கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். சில நேரங்களில், எமக்கு குற்றச்சாட்டுகளும் விடுக்கப்பட்டன. ஆனால், அவர்கள் சளைக்காது, துணிச்சலுடன் மீண்டும் அடுத்த நாள் புகைப்படங்களை உற்சாகத்துடன் எடுத்துக் கொண்டு வந்தார்கள். எம்மோடு பாரிய தன்னம்பிக்கையும் வலிமையும் மிக்க இளைஞர்களே பணியாற்றினார்கள்.

இறுதியில்  இளைஞர்களும் யுவதிகளும் புகைப்பட மொழியை நன்றாகவே கிரகித்துக் கொண்டார்கள். எழுத, பேச, புதிய கண்ணோட்டத்தில் உலகைப் பார்க்கப் பழகினார்கள். சமூகப் பிரச்சனைகள் பற்றி, சமூக சுற்றுச் சூழல் தொடர்பில் அறிவைப் பெற்றார்கள். இறுதியில் உலகிற்கு எடுத்துச் செல்லக்கூடிய மட்டத்தில் படைப்புகளை உருவாக்கக் கூடிய புகைப்படக் கலைஞரொருவர் அவர்கள் அனைவருக்குள்ளும் இருந்தார்.

நாம் அவர்களைத் தூண்டிவிட்டது மட்டுந்தான். தூண்டிவிட்டு அவர்களுக்குள்ளே இருக்கும் படைப்பாளியை இனங்காண உதவியது மட்டும் தான்.

எமக்கு ஒருவாய்த் தேனீரைச் சுவைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் மனதைத் தொடுகின்ற ஒரு கதையாகவே இந்த வேலை உள்ளது.

தேர்ச்சி பெற்ற புகைப்படக் கலைஞர் **நதிஷ்க ரணசிங்க**

தேர்ச்சி பெற்ற புகைப்படக் கலைஞர் **அஜித் செனவிரத்ன**

# புகைப்படச்


## சுற்றுலா

பக்கம் பக்கமாக எழுதிக் காட்டக் கூடிய பல உணர்வுகளைப் பல்வேறு இடங்களில் உலாவி அவர்கள் புகைப்படத்திற்குள் சிக்க வைத்துள்ளார்கள்.

மூத்த சந்ததியின் அன்பு, கருணை - பாட்டாளி மக்களின் உழைப்பு களைப்பு - அன்பு மகிழ்ச்சி, துன்ப துயரங்கள் கலந்த வாழ்க்கை முறைகள் - கலாசாரம் - கனவுகளை நோக்கிய கல்வியைப் போன்றே கௌரவமான சமூகத்தின் அடுத்த தலைமுறையை இந்த சுற்றுலாவில் நீங்கள் சந்திப்பீர்கள்.




செல்வராஜ் அஞ்லினி / ஜெராவிரூட் / 2020



தறுவைக்க பண்டார / ஜொஹாலிஜட் / 2020





என். பிரியதர்ஷினி / ஜெராலிஜட் / 2020



ஆர். அனோஜினி / லோகி / 2020



சு. புவிராஜன் / லோகி / 2020



செ. மணிலொறுயகி / எட்டம்பிட்டுய / 2020



ப. சஜீத்ரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



அருள்பிரகாசம் அஜித்குமார் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



டி.டபிள்யூ அமில நுவான் / ஹொலிரூட் / 2020



செல்வராஜ் அஷ்வினி / ஹொலிரூட் / 2020



அருள்பிரகாசம் அஜித்குமார்  / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



சி. கேதீஸ்வரன் /ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020





ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020







கதிரேசன் சனுஷாலினி / ஹொலிரூட் / 2020




த. யுவராஜன் / லோகி / 2020



அருள்பிரகாசம் அஜித்குமார் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ப. சிந்துஜன் / லோகி / 2020




கதிரேசன் சஜுஷாலினி / ஜொலிஜட் / 2020



த. புவராஜன் / லோகி / 2020









ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020



சுரேஷ் துவாரகன் / ஹொரவீருட் / 2020



ம. சிந்துஜன் / லோகி / 2020


டி.டபிள்யூ அமில நுவான் / ஹொலிரூட் / 2020



சிவபெருமாள் நிரஞ்சன் / எட்டம்பிட்டிய / 2020



அருள்பிரகாசம் அஜித்குமார் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020

சி. கேதீஸ்வரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020







ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020




Dialog





எல். கபில்ராஜ் / வோகி / 2020



ஜெ. குஷாங்கினி / எட்டம்பிட்டிய / 2020



தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020



தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020



ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020





செல்வராஜ் அஞ்ஜலினி / ஜெராலிஙட் / 2020



தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020



செல்வராஜ் அஷ்வினி / ஹொலிரூட் / 2020





ஜெ. துஷாந்தினி/ எட்டம்பிட்டிய / 2020



நெத்மினி சமுத்ரா / எட்டம்பிட்டிய/2020



ஞானசேகரன் கலைவாணி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020

என். பிரியதர்ஷினி / ஹொலிரூட் / 2020







ச. கோகிலப்பிரியா / எட்டம்பிட்டிய / 2020



கதிரேசன் சனுஷாலினி / ஹொலிரூட் / 2020





ம. சிந்துஜன் / லோகி / 2020



சிவபெருமான் நிரஞ்சன் / எட்டம்பிட்டிய / 2020



மகாமுனி நிரோஷன் காயத்திரன்  / ஊவா ஹைலண்ட்ஸ்/  2020



தனுஷ்க பண்டார/ஹொலிரூட்/2020



தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020



கதிரேசன் சஜுஷாலினி / ஹொலிரூட் / 2020





சி. கேதீஸ்வரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ஜெக்மினி சமுத்ரா / எட்டம்பிட்டிய / 2020



ப. சுஜீந்திரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ச. கோகிலப்பிரியா / எட்டம்பிட்டிய / 2020



ஞானசேகரன் கலைவாணி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020



குமார் சுகன்யா / எட்டம்பிட்டிய / 2020



அருள்பிரகாசம் அஜித்குமார் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ஞானசேகரன் கலைவாணி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



மகாமுனி நிரோஜன் காயத்திரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020







த. கலைச்செல்வி / எட்டம்பிட்டிய / 2020



த. யுவராஜன் / லோகி / 2020


ஞானசேகரன் கலைவாணி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ப. சஹிதரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ஆர். கௌசல்யா / ஹொலிரூட் / 2020





எஸ். ஸ்ரீதேவி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



எஸ். ஸ்ரீதேவி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



எஸ். ஸ்ரீதேவி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



மகாமுனி நிரோஷன் காயத்திரன்  / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020





தனுஷ்க பண்டார / ஜொறாலிஜீட் / 2020



எஸ். ஸ்ரீதேவி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020

தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020









செல்வராஜ் அஷ்வினி / ஹொலிரூட் / 2020



தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020


BOOK

ம. சசிபிரியன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020







ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020




ஞானசேகரன் கலைவாணி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020





சி. கேதீஸ்வரன் / ஊவா ஹைலெண்ட்ஸ்/ 2020



டி.டபிள்யூ அமில நுவான் / ஜெராவிஞட் / 2020





தனுஷ்க பண்டார / ஹொலிரூட் / 2020



ஆர். கௌசல்யா / ஹொலிரூட் / 2020






எஸ். ஸ்ரீதேவி / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



குமார் சுகன்யா / எட்டம்பிட்டிய / 2020



ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020



ம. சசிபிரியன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020



சி. கேதீஸ்வரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020





ஆனந்தன் இதயவாணன் / எட்டம்பிட்டிய / 2020



சி. கேதீஸ்வரன் / ஊவா ஹைலண்ட்ஸ்/ 2020



சுரேஷ் துவாரகன் / ஹொலிரூட் / 2020

கதிரேசன் சனுஷாலினி / ஹொலிரூட் / 2020







ம. சிந்துஜன் / லோகி / 2020





த. புவிராஜன் / லோகீ / 2020

# தேயிலைச் சாயம்

## தனிச் சிறப்புமிக்க புகைப்படக் கலைஞர்கள் தமது, கதைகளை எமக்காக கொணர்ந்து தருகின்றனர்.



**ஞானசேகரன் கலைவாணி**

எனது பெயர் ஞானசேகரன் கலைவாணி. ஊவா ஹைலன்ட்ஸ் தோட்ட, பழைய பிரிவில்தான் நான் குடியிருக்கிறேன். ஊவா ஹைலன்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற நான் இப்போது பாடசாலைக் கல்வியை முடித்துள்ளேன்.

இந்த நிகழ்ச்சியில் இணைந்ததால், புகைப்படக் கலையைக் கற்றுக் கொண்டதைப் போன்றே, பல்வேறு புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. அவ்வாறே மலையகப் பிரதேசத்தில் பல்வேறு தோட்டங்களில் நடமாடியதால், எமது மக்கள் முகங் கொடுக்கும் பிரச்சனைகள் பற்றிய ஆழ்ந்த புரிதல் கிட்டியது. டிஜிட்டல் கமரா என்றால் என்ன? அதனை எப்படிப் பயன்படுத்துவது என்றெல்லாம் எந்தவொரு புரிந்துணர்வும் இல்லாத எனக்கு இறுதியில் அதனை சிறப்பாகக் கையாளும் ஆற்றல் கிடைத்தது. பின்னர் எனக்கு சிறந்த மட்டத்திலான புகைப்படத்தை எடுக்க முடிந்தது. உலகப் புகழ் பெற்ற புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்களைப் பார்வையிடுவதற்கும்

உறுதுணையாக அமைந்தது. இந்த புகைப்படக் கண்காட்சி ஊடாக மலையகச் சமூக மக்களின் வாழ்க்கையை படம் பிடிப்பதைப் போன்றே அவற்றைத் தோற்றுவித்து சமூகமயப்படுத்த சந்தர்ப்பம் உரித்தானதைப் பெறுமதியான சந்தர்ப்பமாகவே நான் பார்க்கின்றேன்.



**ஆனந்தன் இதயவாணன்**

அட்டம்பிட்டிய இரண்டாம் பிரிவில் வாழும் நான் ஊவா ஹைலன்ட்ஸ் தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கின்றேன். சிறுவயது முதலே புகைப்படக் கலை பற்றிப் பயில்வதற்கு ஆசையிருந்தாலும், வாய்ப்புக் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் இறுதியில் இந்நிகழ்ச்சியுடன் தொடர்புபட சந்தர்ப்பம் கிடைத்தது.

இங்கு வெறுமனே புகைப்படம் எடுத்தல் மட்டுமல்ல. மலையகத்தின் அழகிற்கு அப்பால் இருக்கின்ற தமிழ் சமூகத்தின் வாழ்க்கை முறையும் பிரச்சனைகள் பற்றியும், கற்பதற்கு சந்தர்ப்பம் உரித்தானது. பல்வேறு தோட்டங்களுக்குச் சென்று அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகள் பற்றிக் கேட்டுத் தெரிந்துகொள்ள முடிந்தது. பல வருடங்கள் கடந்திருந்தாலும் அவர்களது வாழ்க்கையில் எந்தவொரு மாற்றமும் ஏற்படாது குப்பையில் விழுந்த குண்டுமணியாக வாழ்க்கையை நடத்துகின்றார்கள் என்பது தெரிய வந்தது. அவ்வாழ்க்கைகள், மற்றும் அவர்களின் கலாசாரத்தை வெளியுலகத்திற்குக் காட்டுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இப் புகைப்படங்களைக் குறிப்பிடலாம்.

### மகாமுனி நிரோஷன் காயத்திரன்



ஊவா ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலயத்தில் உயர் தரம் பயிலும் நான் ஊவா ஹைலன்ட் இரண்டாம் பிரிவில் வசிக்கின்றேன். புகைப்படங்கள் ஊடாக சமூகப் பிரச்சனைகள், பல்வேறு கலாசாரங்கள், ஒழுக்க நெறிகள் என்பவற்றை வெளியுலகிற்குக் கொண்டு செல்வது எப்படி என்பதை நாம் கற்றுக் கொண்டோம். இப்புகைப்படப் பிடிப்பில், தோட்டத்து மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, மற்றும் கலாசார விடயங்களை வெளியுலகிற்குக் கொண்டு செல்வதே எமது பிரதான நோக்கம். அதனூடாக அவர்களின் பிரச்சனைகளுக்கான தீர்வுகளை நோக்கிச் செல்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வதே எனது பிரதான நோக்கம்.

சமூக பொறுப்புடன் கூடிய புகைப்படக் கலைஞர் என்ற வகையில் எமது மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சனைகளை கலையின் ஊடாகத் தொடர்புறச் செய்து அவற்றுக்குத் தீர்வு தேடுவதில் இடையீடு செய்யக் கிடைத்த சந்தர்ப்பம் தொடர்பில் மலையகத்து இளைஞன் என்ற ரீதியில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

### சி. கேதீஸ்வரன்



நான் ஊவா ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலயத்தில் சாதாரண தரப் பரீட்சைக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்து அவ்வித்தியாலயத்திலேயே உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவைத் தேர்ந்தெடுத்து கல்விச் செயற்பாடுகளை முடித்தேன். எனது தந்தை மரக்கறி வியாபாரத்தை தொழிலாகக் கொண்டுள்ளதுடன், தாய் குடும்பத் தலைவியாவார். சிறுவயது முதலே நான் கிரிக்கட் விளையாடுவதில் திறமையானவன். இக் கிரிக்கட் விளையாட்டில் பாடசாலை மற்றும் மாகாண மட்டத்தில் பல்வேறு வெற்றிகளைப் பெற்றுள்ளேன். பதுளையில் கிரிக்கட் பயிற்சிகளை மேற்கொண்டிருந்த போதுதான் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் இப் புகைப்படக் கலை தொடர்பான நிகழ்ச்சி நடத்தப்படுவதாக ஊவா சக்தி நிறுவனத்தின் ஊடாகத் தெரிந்து கொண்டேன்.

இந்த நிகழச்சியால் புகைப்படக் கலையைப் போன்றே எனது வாழ்வில் முக்கியமாக அமையும் ஆச்சரியமான பல விடயங்களைக் கற்றுக்

கொண்டேன். அவ்வாறே, எனது எதிர்கால வாழ்விற்கு அடித்தளத்தை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பும் உரித்தானது.


### ஜெ. துஷாந்தினி



அட்டம்பிட்டிய இரண்டாம் பிரிவில் வாழும் நான் சித்திரம் வரைதல், பாடல் பாடுதல், மற்றும் கவிதை எழுதுவதை பொழுதுபோக்காக மேற்கொண்டு, அத்திறமைகளை மேம்படுத்திக் கொண்டிருக்கும் போதுதான் இப்புகைப்பட நிகழ்ச்சியுடன் இணைந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது. நான் பண்டாரவளை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் கலைப் பிரிவில் உயர்தரம் பயில்கின்றேன்.

எனக்குள் எத்தனை திறமைகள் இருந்தாலும் நான் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடந்தேன். இந்நிகழ்ச்சியுடன் இணைய சந்தர்ப்பம் கிடைத்ததால், எனது திறமைகளை மேலும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிந்தது. இன்று என்னால் புகைப்படம் எடுக்கவும், அது பற்றிய எனது கருத்தை துணிச்சலாக வெளியிடவும் ஆற்றல் கிடைத்ததெனில், இந்த நிகழ்ச்சியில் இணைந்து நான் பெற்ற பயிற்சியே காரணம். இயற்கையைப் பார்த்து, அது பற்றி முணுமுணுத்த அழகிய வார்த்தைகள் இன்று வேறு விதமாகக் கதை சொல்லும் நிலைக்கு புகைப்படக் கலை மாற்றியது. நன்றாகக் கல்வி கற்பதுடன் புகைப்படக் கலையுடன் தொடர்புற்றுப் பயணிக்க எண்ணுகின்றேன்.

### சிவபெருமான் நிரஞ்சன்



அட்டம்பிட்டிய 1ம் பிரிவில் வசிக்கும் நான் பண்டாரவளை தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி பயில்கின்றேன். மரஞ் செடி கொடிகள், மிருகங்கள், மலைகள், நீர்வீழ்ச்சிகள் போன்ற இயற்கை அழகை புகைப்படம் எடுப்பது மட்டுமே புகைப்படக் கலை என நான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்ட போது புகைப்படக் கலை எனப்படுவது, இயற்கை அழகைப் புகைப்படமாக்குவது மட்டுமல்ல அதைவிடவும் பல விரிவானதொரு

விடயப்பரப்பு என்ற புரிதல் எனக்கு ஏற்பட்டது. புகைப்படக் கலையின் அடிப்படைத் தொழில்நுட்ப அறிவை இதனூடாக என்னால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

'விடியாத இரவென்றெதுவும் இல்லை. முடியாத துயரமென்று எதுவுமில்லை. வடியாத வெள்ளமென்று எதுவுமில்லை. வாழாத வாழ்வென்றும் எதுவும் இல்லை.' என்ற வைரமுத்துவின் வார்த்தைகளின் ஆழமான யதார்த்தத்தைப் போன்று எம்மால் செய்ய முடியாததொன்றும் இல்லை.



### ஆர். கௌசல்யா

நுகவட்டகொட தமிழ் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் நான் ஹொலிரூட் கீழ்ப் பிரிவில் வாழ்கின்றேன். நான் எனது சிறுவயதில், புகைப்படக் கலை என்பது இலகுவாகக் கற்றுக் கொள்ளக் கூடிய விடயம் என்றே நினைத்திருந்தேன். ஆனால் இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதால்தான் நான் இது பற்றிய முறையான அறிவைப் பெற்றுக் கொண்டேன். அவ்வாறே புகைப்படங்களுக்கு மேலதிகமாக வாழ்க்கைக்கும் எதிர்காலத்திற்கும் பயனுள்ள பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன்.



### ப. சஹிதரன்

பதுளை மொரகொல்ல பிரதேசத்தில் வாழும் நான் மொரகொல்ல தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். பாடசாலைக் கல்வியின் பின்னர் பல்வேறு தொழிற் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தாலும், பின்னர் நான் அனைத்தையும் கைவிட்டு விட்டு வீட்டில் முடங்கிக் கிடந்தேன். திடீரென நண்பியொருத்தியிடமிருந்து கிடைத்த செய்திக்கு ஏற்பதான் இந்த புகைப்படக் கலை தொடர்பான நிகழ்ச்சியில் சேர்ந்தேன்.

இந்த நிகழ்ச்சியில் சேர்ந்து கொண்ட போது, புகைப்படக் கலையைக் கற்று மிகச் சிறந்த புகைப்படங்களை எடுப்பதற்கும், அது பற்றித்

திறமையாகக் கருத்துக்களை முன்வைப்பதற்குமான ஆற்றல் கிடைத்தது. அதற்கேற்ப, என்னுள் பல மாற்றங்கள் இடம்பெற்றன. அவ்வாறே தோட்டத்துறை மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் புகைப்படங்களை எடுக்க நான் தூண்டப்பட்டேன். இதுவரை சமூகத்தின் முன்னே தலைகுனிந்து வாழ்ந்த நான், இந்த நிகழ்ச்சியின் பின்னர் தலை நிமிர்ந்து வாழும் அளவிற்கு வளர்ச்சியடைந்தேன்.

**கதிரேசன் சனுஷாலனி**



தலவாக்கலை ரத்நீலகல பிரதேசத்தில் வாழும் நான் தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயத்தில் கலைப் பிரிவில் உயர்தரத்தில் கல்வி கற்பதுடன், ஊடகத் துறையில் ஒரு அறிவிப்பாளராக வேண்டுமென்பது எனது எதிர்பார்ப்பாகும். ஏற்கனவே ஊடகத் துறையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். இந்த நிகழ்ச்சியில் இணைந்த பின்னர் பல் புகைப்படங்களைப் பெற்றுக் கொண்டதுடன், அவை கண்காட்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. புகைப்படக் கலை அனைவராலும் விரும்பப்படும் ஒரு கலையாகும். எனக்குள்ளும் இது பற்றிய ஆசையுள்ளது. மலையகத்தின் இளம் யுவதி என்ற வகையில், புகைப்படக் கலைஞராவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

**த.கலைச்செல்வி**



பதுளை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்திலும் ஊவா ஹைலன்ட்ஸ் தமிழ் மகாவித்தியாலயத்திலும் கல்வியைப் பயின்ற நான் உயர்தரக் கல்வியின் பின்னர், இந்தப் புகைப்படக் கலை நிகழ்ச்சியுடன் இணைந்தேன். ஆரம்ப காலத்தில் புகைப்படக் கலை பற்றிய எந்தவொரு அறிவும் கிடையாது. எனினும், இங்கு புகைப்படக் கலை பற்றிய ஆலோசகர்களின் வழிகாட்டலின் கீழ், தொழில்நுட்ப காரணிகளை சிறப்பாகக் கையாண்டு, புகைப்படமொன்றை எடுக்கும் முறை மற்றும் புகைப்படத்தின் ஊடாக ஒரு கதையைச் சொல்வது எப்படியென்பதை நான் கற்றுக் கொண்டேன். அவ்வாறே, பல்வேறு தோட்டங்களுக்கும்

கிராமங்களுக்கும் புகைப்படம் எடுப்பதற்காகச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததுடன், எனக்குத் தெரியாத பல விடயங்கள் பற்றி தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது.

தோட்டச் சமூகத்தில் இதுவரை தெரியாத பல விடயங்கள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததென்பது அடுத்து குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய விடயம். எமது தோட்ட சமூகத்தை அறிவுபூர்வமான ஒரு சமூகமாக மாற்றுவது எப்படியென்பது இச் செயற்பாட்டில் நாம் கற்றுக் கொண்ட இன்னுமொரு முக்கியமான விடயம். இப்புகைப்படங்களின் ஊடாகவும் நாம் அந்தச் செயலைத்தான் செய்திருக்கின்றோம். புகைப்படக் கலையானது எனது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக எடுத்துச் செல்லப்படும் என்பது எனது எதிர்பார்ப்பு.

**எஸ். ஶ்ரீதேவி**



ஊவா ஹைலன்ட்ஸ் என்னும் அழகிய தோட்டத்தில் வாழும் நான், ஊவா ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலத்தில் சிறுவயது முதல், உயர்தரம் வரை கல்வி பயின்றேன். உயர் கல்விக்காக வர்த்தகப் பிரிவில் வெளிவாரிப் பட்டப் படிப்பைக் கற்றுக் கொண்ட நான் தொடர்ந்தும் எனது ஆசிரியப் பயிற்சியை அட்டாளைச்சேனை அரச ஆசிரியர் கலாசாலையில் பெற்றுக் கொண்டேன். நான் இப்போது நான் கல்விகற்ற ஊவா ஹைலன்ட்ஸ் வித்தியாலத்திலேயே கற்பிக்கின்றேன்.

பாடசாலையில், விளையாட்டு, விடயத்துடனான செயற்பாடுகள், சாரணர், முதலுதவி மற்றும் இளைஞர் சேவைகள் மன்றத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலை கலாசார செயற்பாடுகளிலும் ஈடுபட்டு சமூக சேவை செயற்பாடுகளிலும், பூரண பங்களிப்பை வழங்கினேன். எப்போதும் புதிதாக ஒன்றைக் கற்றுக் கொள்ளும் எனது ஆர்வத்தை இந்த நிகழ்ச்சி அதிகரித்தது.

புகைப்படங்கள் ஊடாக, இன, மத, மற்றும் குல பேதமின்றி எந்த ஒரு நபருக்குள்ளும் ஏதேனுமொரு எழுச்சியை ஏற்படுத்த முடியும்.

சமூக மாற்றத்திற்காக புகைப்படக் கலையைக் கற்றுக் கொள்வது

எனது வாழ்க்கையில் கிடைத்த மிகச் சிறந்த அனுபவமாகும். புகைப்படங்கள் ஊடாக புதியதொரு உலகிற்கான கலந்துரையாடலை உருவாக்க முடியும். அந்தளவிற்கு புகைப்படங்களுக்கு வலிமையுண்டு. சமூக ரீதியான மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்காக கலையைப் பாவிப்பது தொடர்பில், புகைப்படக் கலையைக் கற்றுக் கொள்வதை, தோட்டத்துறையின் புரட்சிக்காக இடப்படும் ஒரு வித்தாகவே நான் நினைக்கின்றேன்.

### அருள்பிரகாசம் அஜித்குமார்



நான் பண்டாரவளை எல்லாவளைத் தோட்டத்தில் வசிக்கின்றேன். புகைப்படக் கலை ஊடாக எமது பிரதேசங்களில் வாழும் மனிதர்களின் வாழ்க்கை முறை, அவர்களது வேதனையை சமூகமயப்படுத்துவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை முறையில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஏதேனுமொன்றை செய்யக் கூடியதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அவ்வாறே சமூகத்திற்கும் இளைஞர்களுக்குமிடையில் காணப்பட்ட இடைவெளியை இனங்காண்பதற்கு வாய்ப்புக் கிடைத்தமை, புகைப்படங்கள் ஊடாக தோட்ட மக்களின் பிரச்சனைகளை கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ள முடிதல் போன்ற விடயங்கள் பற்றி மகிழ்ச்சியடைய முடியும்.

### ச. கோகிலப்பிரியா



மலைக் குன்றுகள் மற்றும் பச்சை வண்ணம் மிகுந்த றொபேரி பிரதேசம், நான் பிறந்த கிராமம். ஊவா ஹைலன்ட்ஸ் மகா வித்தியாலத்தில் உயர் தரத்தைக் கற்ற பின்னர், கிழக்குப் பல்கலைகழகத்தில் கலைப் பீடத்தில் பட்டப்படிப்பைப் பயில சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். நான் உயர்தரம் பயின்றுவிட்டு, வீட்டில் இருக்கும் காலத்தில்தான் இந்த ஆச்சரியமான நிகழ்ச்சியுடன் இணைந்து கொண்டேன். புகைப்படங்கள் மொழியில்லாமலேயே பல விடயங்களைப் பேசுகின்றன. அது எவ்வளவு உணர்வுபூர்வமானது?ள எந்தளவுக்கு பொருள் பொதிந்தது? எந்தளவுக்குப் பிரச்சனைகள் தீர்க்கப்படலாம்? எந்தளவுக்கு பதில்களை வழங்கக் கூடும்? புகைப்படங்கள் ஊடாகப் பல விடயங்களைப் பற்றிப் பேச முடியும்.

## செ. மணிலாநாயகி



பதுளை விவேகானந்தா வித்தியாலயத்திலும் ஊவா ஹைலன்ட்ஸ் வித்தியாலத்திலும் கல்வி பயின்ற நான் இப்போது VTA கிராஃபிக் டிசைன் பாடநெறியைக் கற்று வருகின்றேன். இசையைக் கேட்பது, பூமரம் நடுவது மற்றும் கிராமத்தின் இளைஞர் சங்கங்களோடு இணைந்து சமூக சேவைகளில் ஈடுபடுவது எனது பொழுதுபோக்காக இருந்தது.

புகைப்படம் என்றால் என்ன என்பது கூடத் தெரியாதிருந்த போது இந்த நிகழ்ச்சியுடன் இணைந்ததன் ஊடாக பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். அதனூடாக சமூக மாற்றமொன்றைச் செய்ய முடியும் என்பதும் புரிந்தது.

புகைப்படக் கலை ஊடாக நாம் சமூகத்தில் உள்ள பல சிக்கல்களை எடுத்துக் காட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

## சுந்தரராஜ் சாந்தினிப்பிரியா



ஆரம்பத்தில் புகைப்படக் கலை இலகுவானதாகவே எனக்குத் தோன்றியது. பயிற்சி அமர்வுகளில் பல்வேறு தலைப்புகளின் கீழ் கற்றுக் கொள்ளும் போதுதான் இது சிரமமான விடயம் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஆனால் புகைப்படம் எடுக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதுபற்றிய அறிவு அதிகரித்தது. புகைப்படத்தைப் போலவே தோட்டத்து சமூகம் பற்றியும் இங்கு நாம் கற்றுக் கொண்டோம். புகைப்படத் துறையில் ஒரு பயணத்தை மேற்கொள்வதற்கு இன்று நான் சிறந்த அறிவைப் பெற்றுள்ளேன்.

### சுரேஷ் துவாரகன்



புகைப்படம் எடுப்பது தொடர்பிலான ஆர்வம் எனக்குள் இருந்த போதிலும் கெமராவை எப்படிக் கையாள்வது என்பது பற்றிய விளக்கம் எனக்கு இருக்கவில்லை. இந்த நிகழ்ச்சியின் பின்னர் கெமராவைக் கொண்டு புகைப்படம் எடுப்பதைப் பற்றியும் அதனை கலைக்குகந்த வகையில் பயன்படுத்துவது எவ்வாறு என்பது பற்றியும் கற்றுக் கொண்டேன். உயர் தரக் கல்வியை நிறைவு செய்த பின்னர் ஓர் புகைப்படக் கலைஞராக பணியாற்ற வேண்டுமென நான் எண்ணியிருக்கின்றேன்.

### ம. சசிபிரியன்



ஊவா ஹைலண்ட்ஸ் மகா வித்தியாலயத்தில் உயர் தரத்தில் கணக்கியல் பாடம் படிக்கிறேன். கிரிக்கெட், கபடி, எல்லே ஆகிய விளையாட்டுக்களில் எனக்கு ஆர்வம் அதிகம். இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதன் மூலமாக அதிகமான விடயங்களைக் கற்றுக் கொண்டேன். புகைப்படக் கலைஞர்கள் என்ற வகையில் சமூகத்தில் எமக்கு நல்லதொரு வரவேற்பும் கிடைத்துள்ளது. வெறுமனே புகைப்படம் எடுப்பதனையும் விட பேசும் படங்கள் மூலமாக எமது தோட்டத்துறை சமூகத்தின் கதைகளை வெளிக்கொணர முடியும். இதன் மூலமாவது தோட்டத்துறை மக்களுக்கு சிறந்த வாழ்க்கைமுறை அமைவதற்கான வழி பிறக்க வேண்டுமென நான் நினைக்கிறேன்.

### செல்வராஜ் அஷ்வினி



ஹட்டன் காஃபேக்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் உயர் தரக் கல்வியை நிறைவு செய்ததன் பின்னர் சர்வோதய முன்பள்ளியில் பணியாற்றிய அதேவேளை சர்வோதய நிறுவனத்தில் உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளேன். தற்போது சுவசக்தி நிறுவனத்தில் பணியாற்றுகின்ற அதேவேளை நுவரெலியா மாவட்டத்தின் மனித உரிமைகள் முதலுதவி நிலையத்திலும் பணியாற்றி வருகின்றேன்.

ஒரு சட்டதரணியாக வேண்டுமென்பதே எனது குறிக்கோளாக இருந்தது. கல்விசார் தகைமைகள் போதுமானதாக அமையாத காரணத்தினால் ஊடகத் துறையில் ஆர்வம் அதிகரித்தது. எனினும் அதற்கு

எந்தவொரு சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை. இந்த புகைப்படக்கலை பற்றிய பாடநெறியில் இணைந்து கொண்டதன் மூலமாக ஊடகத் துறையில் தடம் பதிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அத்துடன் பொறுப்புடைய ஓர் பிரஜை என்ற வகையில் எமது சமூகத்தினுள் மறைந்து கிடக்கும் பல விடயங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்கு இதுவொரு சந்தர்ப்பமாகவும் அமைந்தது.

**நெத்மினி சமுத்ரா**



நான் பதுளை விஹாரமாதேவி மகளிர் வித்தியாலயத்தில் கலைப்பிரிவில் கல்வியை தொடர்கிறேன். இந்த நிகழ்வில் இணைந்து கொண்டதன் மூலமாக மலையக மக்களது பல்வேறான பிரச்சினைகள் பற்றிய தெளிவினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. மலையக சமூகம் பற்றிய எனது தெளிவு மேலும் விரிவடைந்தது. அத்துடன் புகைப்படத்தின் மூலமாக மேற்படி பிரச்சினைகளை சமூகமயப்படுத்தி அவர்களது வாழ்க்கை தொடர்பிலான புதியதொரு கலந்துரையாடலை உருவாக்க முடியும் என்ற விளக்கத்தினையும் நான் பெற்றுக் கொண்டேன்.


ஆரம்பத்தில் புகைப்படம் எடுப்பது பற்றிய எந்தவொரு ஆற்றலும் என்னிடம் இருக்கவில்லை. ஆனாலும் இப்போது இந்த கலையை மேலும் கற்று வருகின்றேன். எனது வாழ்க்கையில் பிரதான ஒரு அங்கமாக புகைப்படக் கலையை மேற்கொள்ள எதிர்பார்க்கின்றேன்.

**ம. சிந்துஜன்**



பலவகை நூல்களை வாசித்தல், திரைப்படம் பார்த்தல் மற்றும் திரைக்கதை எழுதுதல் என்பன எனது பொழுது போக்குகளாகும். புகைப்படக் கலைத்துறை தொடர்பிலும் எனக்குள் ஆர்வம் இருந்தது. இதற்கு முன்னர் நான் புகைப்படங்களை எடுத்திருந்தாலும் புகைப்படக் கலை மற்றும் கமராவைக் கையாளுதல் தொடர்பில் போதுமான தெளிவு என்னிடம் இருக்கவில்லை. இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதன் மூலமாகவே அது பற்றிய போதுமான தெளிவை நான் பெற்றுக் கொண்டேன். புகைப்படக் கலை தொடர்பாக கற்பதற்கு இன்னும் நிறைய விடயங்கள் உள்ளன. இது பற்றிய எனது ஆய்வினை மேலும் அதிகரிப்பதைத் தவிர குறைத்துக் கொள்ள மாட்டேன்.

**ந. பிரியதர்ஷினி**



இக்காலப்பகுதியில் புகைப்படக் கலை தொடர்பிலான மக்களது ஆர்வமும் பங்களிப்பும் மிக அதிகமாகவே காணப்படுகின்றது. நவீன உலகத்தில் யுவதிகள் மத்தியில் பல்வேறான கலைகள் பற்றிய விருப்பம் அதிகமாகவே உள்ளது. புகைப்படக் கலையானது சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளையும் கருத்துக்களையும் மிகத் தெளிவான வகையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு உதவியாக அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சியின் மூலமாக புகைப்படக் கலை பற்றிய அறிவை மாத்திரமன்றி வாழ்க்கைக்கு அவசியமான பல விடயங்களையும் கற்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

**மயில்வாகனம் தனுஷிகா**



தலவாக்கலை லோகி பிரிவின் கூம்வுட் தோட்டத்தில் நான் வசித்து வருகின்றேன். நிகழ்கால சம்பவங்களை வண்ணமயமாக்கி புகைப்படக் கலையில் உள்ளடக்கும் புகைப்படக் கலை தொடர்பான பயணத்தில் - கரையிலிருந்து பயணித்த ஓர் ஓடமாக ஒரு வருட காலமாக மேற்கொண்ட பயணத்தின் வாயிலாக பலவிடயங்களையும் கற்றுக் கொள்ள முடிந்தது. மறைக்கப்பட்ட மாயைகளை பூலோகத்தில் விரிவடையச் செய்யும் ஆயுதத்தினைக் கையிலேந்தி கிராமம் கிரமமாக சென்று பல புகைப்படங்களை நாம் எடுத்தோம்.

**த. யுவராஜன்**



தலவாக்கலை லோகி தோட்டத்தில் வசிக்கும் நான் லயன் அறையில் வாழும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனாக தோட்டத்தில் இன்னோரான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ளேன். வாழ்க்கையில் நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போன பல ஆசைகள் எனக்குள் இருந்துள்ள அதேவேளை புகைப்படக் கலையும் அதில் பிரதான ஒன்றாகும்.

எனினும் புகைப்படக் கலையை கற்பதற்கான நிதி வசதி இருக்கவில்லை. இருந்த போதிலும் குறுந்திரைப்படங்களை உருவாக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்தேன். இதுவரையில் பல

குறுந்திரைப்படங்களை எழுதி தயாரித்தும் உள்ளேன். எதிர்பாராத விதமாக நான் இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதன் மூலமாக எனது எதிர்பார்ப்புகளில் ஒன்றாகிய புகைப்படக் கலையை கற்பதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அது எனது திரைப்பட உருவாக்கப் பணிகளுக்கும் பெரிதும் ஒத்துழைப்பாக அமையும். மிகச் சிறந்தவொரு புகைப்படக் கலைஞராக எமது சமூகத்திலும் ஏனைய சமூகங்களிலும் நிலவும் பிரச்சினைகளை புகைப்படக் கலையினூடாக வெளிக்கொணர்வதே எனது எதிர்கால குறிக்கோளாகும்.



## குமார் சுகன்யா

பதுளை பண்டாரவளை வித்தியாலயத்தில் கல்வியைப் பெற்ற நான் அட்டம்பிட்டிய இரண்டாம் பிரிவில் வசித்து வருகின்றேன். நான் வாழும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஓர் பெண்ணாக எனது பங்களிப்பினை நல்குவதே எனது பெரும் கனவாக உள்ளது. எமது சமூகம் இன்று எல்லையில்லா பிரச்சினைகளால் துவண்டு போயுள்ளது. இருந்த போதிலும் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய தரப்பினர் தமது கவனத்தினை செலுத்தாமை மிகவும் கவலையளிக்கிறது. எமது இந்த பிரச்சினைகளை சமூகமயப்படுத்துவதற்கான ஒரு வழியைத் தேடிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் தான் இந்த புகைப்படக்கலை பற்றிய நிகழ்ச்சியில் இணைந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது.

எமது சமூகம் முகம் கொடுக்கும் பல்வேறான பிரச்சினைகள் தொடர்பில் பின்நிற்காது வெளிப்படையாகவும் துரிதமாகவும் தீர்வுகளைக் கண்டறிவதற்கான சமூக தெளிவுபடுத்தலை ஏற்படுத்த புகைப்படக் கலையை இப்போது எங்களால் பயன்படுத்த முடியும்.



## ரீ.எம். தனுஷ்க பண்டார

தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்தில் வசிக்கும் நான் நுவரெலியா சுமன இரண்டாம் நிலைப் பாடசாலையில் கல்வியைப் பெற்றுக் கொண்டேன். புகைப்படத்துறை தொடர்பில் அடிப்படை எண்ணம் இருந்த போதிலும் இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டதன் பின்னரே அது தொடர்பான முழுமையான விளக்கத்தினைப் பெற்றுக்

கொண்டேன். அத்துடன் புகைப்படத் துறையினூடாக கருத்துக்களைத் தெரிவித்தல் மற்றும் சமூகத்திற்கு ஏதேனும் செய்தியை வெளிப்படுத்தும் பேசும் புகைப்படம் ஒன்றினை எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பான அறிவும் எனக்கு கிடைத்தது. புகைப்படம் என்பது எவராலும் உணர்ந்து கொள்ளக் கூடிய ஒரு மொழியாகும். தொழிற்றுறை ரீதியாக புகைப்படத்துறையை தெரிவு செய்யவும் நான் வாழும் சமூகத்திற்காக மேற்கொள்ளக் கூடிய உச்ச சேவையை ஆற்றவும் எதிர்பார்க்கின்றேன்.



## டி.டபிள்யூ அமில நுவான்

தலவாக்கலை ஹொலிரூட் கிழக்கு பிரிவில் நான் வசிக்கிறேன். சுமன இரண்டாம் நிலைப் பாடசாலையில் கல்வியைப் பெறுகின்ற நிலையில் இந்த நிகழ்ச்சியில் இணைந்து கொண்டேன். புகைப்படத்துறை என்பது தமது கண்ணால் காண்கின்றதிலும் பார்க்க நுட்பமாக ஆராயும் மீளுருவாக்கம் என்பதனை நான் இந்த நிகழ்ச்சியின் மூலமாகவே அறிந்து கொண்டேன். அதேவேளை எமது பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களது வாழ்க்கை முறைமை தொடர்பில் பரந்த தெளிவினையும் பெற்றுக் கொண்டதோடு அவற்றை புகைப்படங்கள் வாயிலாக சமூகத்திற்கு எடுத்துரைக்கவும் முடிந்தது. இந்த மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வினை பெற்றுக் கொடுக்க இந்த நிகழ்ச்சியின் வாயிலாக சந்தர்ப்பம் உள்ளதாக நான் நினைக்கிறேன். அதே வேளை எமக்கு நிறைய அனுபவங்களும் கிடைத்தன. குழுவாக செயற்படுதல், பல்வேறான சவால்களுக்கு முகங்கொடுத்தல் என வாழ்க்கைக்கு அவசியமான பல விடயங்களையும் அறியக் கிடைத்தது.

# ‘தேயிலைச் சாயம்’
## பற்றி ஓரிரு வார்த்தைகள்

2020 செப்டம்பர் 26 ஆம் திகதி கொழும்பு லயனல் வெண்ட் கலையரங்கில் ஆரம்பமாகிய ‘தேயிலைச் சாயம்’ என பெயரிடப்பட்ட புகைப்படக் கண்காட்சி மூலம் மலையகத்தைச் சேர்ந்த 40 இளைஞர் யுவதிகளினால் சமர்ப்பிக்கப்படும் நூறு புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

இப் புகைப்படங்கள் பற்றி மொத்தமாகக் பார்க்கின்ற போது அதன் ஊடாக இலங்கையின் மலையகப் பிரதேசத்தை அண்மித்த தேயிலைத் தோட்டங்களில் தொழில் புரியும் மற்றும் அங்கு வாழ்க்கை நடாத்தும் தமிழ் மக்களின் அன்றாட வாழ்வு பற்றிய ஒரு கதை அப் புகைப்படங்கள் மூலம் தொகுக்கப்பட்டிருந்தது. அது அப் பிரதேசத்திற்கு வெளியில் இருந்து சென்ற ஆய்வாளர்களால் அல்லது அவ்வாறான வேறு தொழில்சார் நிபுணர்களால் கூறப்படும் ஒரு கதை அல்ல. அது இந்த தோட்டப்பகுதியில் வாழும் இளைஞர் யுவதிகள் கூறும் கதை. வேறு வகையில் கூறுவதாயின் தமக்கு நன்றாகத் தெரிந்த தங்களுடைய வாழ்க்கை பற்றிய கதை. இந்த சமூகம் பற்றி தற்போதைக்கு நான் பார்த்துள்ள மிகவும் சக்தி வாய்ந்த புகைப்படங்களின் தொகுப்பு இதுவென நான் நம்புகிறேன். உண்மையிலேயே மிகவும் சரியாகக் கூறுவதாயின் இச் சமூகம் தொடர்பாக நான் தற்போதைக்கு பார்த்து அல்லது வாதித்துள்ள சக்தி வாய்ந்த உரையாடல்களுள் ஒன்றாக இது காணப்படுகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆராய்ச்சியாளர் என்ற வகையிலும் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்ற வகையிலும் இச் சமூகத்தின் தோற்றம் மற்றும் அவர்களின் வரலாறு போன்றே அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் அரசியல் தொடர்பாக பல்வேறு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் எழுதியுள்ள பலவற்றை நான் வாசித்துள்ளேன். ஆயினும் அவை அனைத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது இவ்

இளைஞர் யுவதிகள் கட்புல ரீதியாக கூறியுள்ள இந்த உரையாடலானது மிகவும் முனைப்பானதும் போலித்தனமற்றதுமாக எனக்குத் தோன்றுகின்றது. இங்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படம் ஒன்றுக்கு வழங்கப்பட்டுள்ள இது எளிமையானது அல்ல, வறுமை என்னும் தலைப்பு ஒட்டு மொத்த இப் புகைப்படக் கண்காட்சியை விவரிக்கின்றது என நான் நான் நினைக்கின்றேன். அதாவது, தமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள வறுமையையும் வெல்வதற்குக் கடினமான பல்வேறுபட்ட சவால்களையுமே இவ் இளைஞர் யுவதிகள் ஒட்டுமொத்தமாகக் கூறியுள்ளனர்.

இந்த மலையகத்தைப் பற்றிய சுற்றுலா சுவரொட்டிகளிலும் வண்ணத் தபால் அட்டைகளிலும் சொல்லப்படும் ஒரு சொர்க்கபுரியின் கதை அல்ல. இது அந்த கட்டுக்கதையின் பின்னால் உள்ள ஒரு துரதிர்ஷ்டமான யதார்த்தம். கண்காட்சி நடைபெற்ற போது நான் அங்கு நின்ற எந்தவொரு புகைப்படக் கலைஞருடனும் பேசவில்லை. ஆயினும் நான் அங்கு வைக்கப்பட்டிருந்த அனைத்து புகைப்படங்களையும் இரண்டு மூன்று தடவைகள் நன்றாகப் பார்த்தேன். அவர்களது கதையை கட்புல ரீதியாக இந்த புகைப்படத் தொகுப்பு மூலம் அவர்கள் பலம் பொருந்திய வகையில் அறிவித்திருந்தமையே நான் அவ்வாறு அவர்களுடன் பேசாமைக்குக் காரணமாக அமைந்தது. அதற்கு அப்பால் பேச வேண்டிய எதுவும் எஞ்சியிருக்கவில்லை.

இப் புகைப்படங்கள் மூலம் எமக்கு மிச்சம் வைக்கப்படும் இன்னொரு கதை உள்ளது. எமது நாட்டு அரசியலில் வேரூன்றிக் காணப்படும் பாசாங்குகளும் ஆரவாரங்கள் பற்றிய கதையே அது. 2020 ல் இந்த இளைஞர் யுவதிகளுக்கு தமது வாழ்வின் யதார்த்தத்தை இவ்வளவு துயரத்துடன் சமர்ப்பிக்க நேர்ந்தது ஏன்? சுதந்திரத்தின் பின், தேசிய அரசியலால் இந்த மக்கள் பிரித்தானிய காலனித்துவ யுகத்திலிருந்த துரதிர்ஷ்ட நிலைமைகளிலிருந்து உரிய முறையில் மீட்டெடுக்கப்படவில்லை என்பது தெளிவாகின்றது. அவ்வாறே தாம் இந்த சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம் என மார்தட்டிக் கொள்ளும் அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் மற்றும் அவ்வாறான ஏனைய அரசியல் குழுக்கள், தாம் தொடர்ந்தும் இச் சமூகத்தை வறுமை நிலைக்குள்ளேயே வைத்திருக்கின்றோம் என்பதை வெளிக்காட்டி உள்ளன.

இப் புகைப்படங்களைப் பார்த்தவுடன் இந்திய புகைப்படக் கலைஞர் ரகு ராயினால் எடுக்கப்பட்ட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் எல்லைப்புறமாக அமைக்கப்பட்டுள்ள அகதி முகாம்களின் புகைப்படங்கள் எனது ஞாபகத்துக்கு வந்தன. ரகு ராயின் புகைப்படத் தொகுப்பின் ஒரு பகுதியை சில ஆண்டுகளுக்கு முன்னர் தெற்காசிய பல்கலைக்கழகத்தில் காட்சிப்படுத்துவதற்கு அப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. அது எமது பாடநெறியின் ஒரு பகுதியாக அமைந்தது. எவ்வாறாயினும் ரகு ராய் அகதிகள் மற்றும் அகதி முகாம்களையே புகைப்படம் எடுத்திருந்தார். ஆயினும் இந்த இளைஞர் யுவதிகள் அவர்கள்

அன்றாடம் வாழ்க்கை நடாத்தும் சூழல் மற்றும் பிரதேசங்களையே புகைப்படம் எடுத்துள்ளார்கள். அவற்றினூடே அவர்கள் தமது வீடுகளையும் தமது சுற்றுச் சூழலையும், தமது உறவினர்களையுமே காட்டியிருக்கின்றார்கள். இவை அகதி முகாம்கள் அல்ல. அவ்வாறே இவர்கள் அகதிகளும் அல்லர். இவர்கள் இலங்கையின் பிரசைகளாவர்.

இந்தப் புகைப்படங்களின் ஊடாக இவ்விளைஞர் யுவதிகள் தமது இந்த யதார்த்தத்திற்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் யார் எனக் கேட்பதாகவே நான் எண்ணுகின்றேன். இந்த துரதிர்ஷ்டவசமான நிலைமைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களில் ஒரு பகுதியினர் அவர்கள் மத்தியிலேயே இருப்பதுதான் கவலைக்குரிய விடயம். மற்றவர்கள் எம்மிடையே வாழ்கின்றார்கள்.

**பேராசிரியர் சசங்க பெரேரா,**
தெற்காசிய பல்கலைக்கழகம்
Patitha.lk / 26.09,2020

# தேயிலைச் சாயம் -
## வேதனை மீதான கலைக்கண் பார்வை

புகைப்படங்களைப் பார்க்க வந்த அனைவரும் கேட்ட ஒரு விடயம் இருந்தது. அதாவது ஏன் நீங்கள் துயரத்தை மட்டும் காட்டினீர்கள்? ஏன் மகிழ்ச்சியைக் காட்ட முயற்சிக்கவில்லை எனக் கேட்டனர். பாருங்கள் இவற்றிலே துன்பம், பின்னடைவு, என்பவைதான் உள்ளன. ஏதோ ஒரு பச்சாதாப உணர்வுதான் தோன்றுகின்றது. இவ்வாறான பல கதை பேசியவர்களும் இருந்தார்கள். நாம் பதில் அளித்தோம். மகிழ்ச்சியைக் காட்ட இன்னும் பலர் உள்ளனர். அவர்கள் மகிழ்ச்சியை சித்தரிக்கின்றார்கள். துன்பத்தைக் காட்டி உண்மையைச் சொல்வதே எமது தேவையாக இருந்தது. மகிழ்ச்சி இன்னும் தொலைவிலுள்ளது என்பதைச் சொல்ல வேண்டியிருந்தது. மற்றவர்கள் காட்டுகின்ற மகிழ்ச்சிக்குள்ளும் துன்பம் இருக்கிறது என்பதை சொல்லும் தேவையிருந்தது. யாரேனும் தேயிலைத் தோட்டமொன்றின் அழகைக் காட்டும் புகைப்படமொன்றில் அவற்றின் வேர் தெரிவதில்லை. அந்த வேர்களை உன்னிப்பாகக் கவனித்தால் துன்பத்தைக் காணலாம்.

பண்டாரவளை ஊவா ஹைலன்ட்சில் வசிக்கின்ற இளம் ஆசிரியையுமான எஸ். ஸ்ரீதேவி தலவாக்கலை கதிரேசன் கோவிலின் விசாலமான மண்டபத்தின் வெளிப்புறத்திலிருந்து தோட்டத்து இளைஞர் யுவதிகளின் புகைப்படக் கண்காட்சியின் பங்காளியாக அவள் பெற்ற அனுபவங்களைப் பற்றிச் சொல்லுகிறாள். ஸ்ரீதேவியால் எடுக்கப்பட்ட புகைப்படமொன்றும் இந் நூற்றுக் கணக்கான புகைப்படங்களிடையே காட்சிப்படுத்தப்படுகின்றது. பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் இரண்டினதும் இளம் தோட்டத்துறை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புகைப்படக் கலைஞர்கள் அனைவரும் பயிலுனர்களே. அவர்களிடம் ஒருவரிடமும், தமக்கென்று ஒரு கமராகூட இல்லை. பதுளை மாவட்டத்தில் அட்டம்பிற்றி மற்றும் ஊவா ஹைலன்ட் தோட்டங்களிலும், நுவரெலியா மாவட்டத்தில் லொகீ மற்றும் ஹொலிரூட் தோட்டங்களிலும் புகைப்படக் கலையில் ஆர்வமுள்ள இளைஞர்கள் இக் கண்காட்சியில் பிரதிநிதித்துவப்படுத்தியதுடன், அஜித் செனவிரத்ன

மற்றும் நதிஷ்க ரணசிங்க ஆகியோர் ஒளிப்பதிவு மற்றும் புகைப்படத் தொகுப்பு பற்றிய பயிற்சி செயலமர்வுகளை நடத்தி அவர்களை ஊக்குவித்தனர். இறுதியில் தோட்டங்களின் உயிர்த் துடிப்பைச் சொல்லுகின்ற நாற்பத்தையாயிரம் புகைப்படங்களில் நூறு புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்து காலத்தை கடந்தோடிச் செல்லாதவாறு அதனை ஆணியடித்து ஓரிடத்தில் தரித்து வைத்த துன்பத்தைப் பற்றி உலகிற்குச் சொல்லத் தீர்மானித்ததாக ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளரான கவிஞர் லஹிரு கித்தலகம குறிப்பிட்டார்.

'மலையகத்து தமிழ் மக்கள் இலங்கையின் பொருளாதாரத்தின் மிகச் சிறந்த ஒரு பகுதியினர். சிலோன் ரீ புகழ்பெற்றிருந்தாலும், இந்த மனிதர்களைப் பற்றி யாரும் பேசுவதில்லை. 200 வருடங்களாக இந்த மனிதர்கள் சிறப்புரிமைகள் அற்றவர்கள். அதனால் அவர்களைப் பற்றிய பேச்சை ஆரம்பிக்கும் தேவை எமக்குள்ளது. அது கொள்கை மட்டத்திலான வேலையாக அமைய வேண்டும் என நாம் நினைத்தோம்.' கித்தலகம என்ற கவிஞர் புதியதோர் கவிதையின் மூலவேரைக் காட்டுகின்றார்.

### போராட்டங்களை நடத்தலாம்

'நாம் மோதல்களுக்குப் பதிலாகப் போராட்டம் செய்ய கலையைத் தேர்ந்தெடுத்தோம். புகைப்படக் கலையை நாம் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் அதனோடு இவ்விளம் குழுவினர் பொருந்துகின்றனர் என்பதே அதற்குக் காரணம். நாம் அவர்களுக்கு ஒருவகையில் தொழிற் பயிற்சியொன்றையும் வழங்கினோம். இப்போது தோட்டங்களிலுள்ள இந்த இளைஞர் யுவதிகளுக்கு போட்டோ பிடிக்கத் தெரிந்தவர்கள் என்ற ஒரு பெயர் கிடைத்துள்ளது. ஆனால் அது பெரிய விசயமல்ல. கலையை ஈடுபடுத்தி சமூக மாற்றத்தை மேற்கொள்ள முடியும் என்ற விடயத்தைப் பற்றிய அறிவை அவர்களுக்கு வழங்க எம்மால் முடிந்தது.' கவிஞர் லஹிரு கித்தலகம மாற்றத்தின் அளவைச் சொல்லும் போது எஞ்சியுள்ள சில விடயங்கள் பற்றிய உணர்வுகளும் எஞ்சியிருந்தன. கதிரேசன் கோவில் மண்டபத்தை ஒழுங்குபடுத்தி, புகைப்படங்களைத் தொங்கவிடுவதற்காக உழைத்துக் கொண்டிருந்த போது இது என்ன? இவ்வாறான ஒன்று எதற்காக எனக் கேள்வி கேட்ட நிழல் உருவங்களும் இருந்தன. இங்குதான் முரண்பாடுகள் எழுகின்றன. தேவையிருப்பின் இக் கண்காட்சியை எட்டிப் பார்த்து துன்பத்தைப் புரிந்து கொண்டிருக்கலாம். அது செசானின் ஓவியத்தைப் போன்றது. 'தூக்கிட்டு இறந்த மனிதனின் இல்லத்தைப் போன்றது.' சுற்றிலும் காணப்படுவது துன்பம், இருள், தனிமை. அவர்களுடைய ஆயிரம் ரூபா சம்பளப் போராட்டம் குளிர்ந்து உறைந்து போய்விட்டது. வீட்டுரிமை வழங்கும் அரசியற் கதை பழையது. கௌரவம் தொடர்பான போராட்டம் அந்த இடத்திலேயே. தேயிலைச் சாயத்திலுள்ள கசப்பின் ஈர்ப்பு, வாழ்க்கையின் கசப்பில் இல்லை.

எனவே இந்த வேதனைமிக்க வாழ்க்கையின் அழகியலை அவர்களுடைய கண்களாலேயே பார்க்க வேண்டும். 'இந்தப் புகைப்படங்களை சினிமாக் காவியத்தைப் போன்று தொகுக்க

வேண்டும். அப்போது என்றாவது ஒருநாள் அது போராட்ட அழகியல் பற்றிய நினைவாக மாறும். எனவேதான் மலையகத்து எழுத்தாளரான எம். சிவலிங்கம் 'இந்த பூமியில் இருக்கும் மரஞ்செடி கொடிகள், இப்போது எம்மை குழிக்குள் வாவென்று அழைக்கின்றன. போவதற்கு முன்னர் நாம் இந்த இளைஞர்களுக்கு உலர்ந்து சருகான சமூகத்தைக் கட்டியெழுப்புமாறு சொல்லுகின்றோம். மலையகத்து அரசியல்வாதிகள் இந்தப் புகைப்படங்களை பாராளுமன்றத்தில் காட்டுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த வேண்டும். சிறுபான்மைக் குழுவொன்றின் வேதனையை அதிகாரத்தின் பார்வையில் விழச் செய்ய வேண்டும்.' எனக் கூறுகின்றார்.

## நித்திரையிலிருந்து விடுவித்தல்

'உண்மையில் இது பிரச்சனைகளைக் காட்டுகின்ற புகைப்படக் கண்காட்சியல்ல. எமக்குள்ளேயே சமூக அறிவை ஏற்படுத்திக் கொள்வதே எமது நோக்கம்.' புகைப்பட உரிமையாளர்களாக மாறியிருக்கும் ஒவ்வொரு இளைஞனும் யுவதியும் அதனை அவ்வாறு பாடமாக்கிக் கொண்டு சொல்லவில்லை. தோட்டப் பகுதிகளில் ஒவ்வொரு அங்குலப் பகுதிகளிலும் நடமாடி கமராவைக் குறிவைக்கும் போது அவர்களுக்குள் உருவான உணர்வே அது.

அதனாற் தான் 'சமூகத்தைப் பற்றி ஆழமாகச் சிந்திக்காத நாம் இந்த செயலிலிருந்து ஆழமான ஒரு நோக்கை ஏற்படுத்திக் கொண்டோம்.' என ஸ்ரீதேவி கூறுகிறார். 'இந்த புகைப்படங்களில் இருப்பது எமது வாழ்க்கை. ஆனால் நாம் இத்தனை காலமும் நாம் அந்த வாழ்க்கையைப் பற்றி அவ்வாழ்க்கைகளைப் பாதிக்கும் பிரச்சனைகள் பற்றிப் பேசாது ஒரு கூட்டுக்குள் அடைந்து கிடந்தோம். எனவே அந்த வாழ்க்கைகளை புகைப்படங்களாக ஒரு கட்டமிட்டபோது பெரும் சமூகத்தோடு ஒப்பிடுகையில் துன்பத்திலும் பின்னடைந்தும் இருப்பதை நாம் பார்த்தோம். எஜமானர்களுக்கு, அரசியல்வாதிகளுக்கு இதுதான் எமது போராட்டத்தின் அழகியல் என உணர்த்துகின்றோம்.' என அவர் குறிப்பிடுகின்றார்.

ஹட்டனைச் சேர்ந்த என். பிரியதர்ஷனி உயர்தரத்தை முடித்து விட்டு வீட்டில் இருக்கும் போது இது தொடர்பிலும் இதன் மூலம் வாழ்க்கையையும் கற்றுக் கொண்டார். 'நாம் பார்க்கின்ற விடயங்களைப் போட்டோக்களில் பார்க்கின்ற போது இவைதான் எமது வாழ்க்கையா என எமக்கே எம்மீது கவலையேற்பட்டது' என அவர் குறிப்பிடுகின்றார். 'புகைப்படங்களைப் பார்வையிட வந்தவர்கள் எமது திறமைகளைப் பார்த்து மகிழ்ந்தனர். இவற்றின் உள்ளடக்கத்தைப் பார்த்துக் கவலைப்பட்டனர்.' கவலையும் மகிழ்ச்சியும் ஒரே புள்ளியில் இணைந்த விதத்தையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

தமது வாழ்க்கையின் பல்வேறு துன்ப துயரங்களை அழகியல் ரீதியாக வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாக இளம் யுவராஜ் குறிப்பிடுகின்றார். 'நிறையப் பேர் இவற்றைப் பார்த்துக் கவலைப்பட்டார்கள். அவர்கள் கவலைப்படுவதைப் பார்த்துத் தான் நான்

சந்தோசப்பட்டேன். ஏனென்றால் இது நாங்கள் சமூகத்தோடு செய்கின்ற மோதல் என்பதால். ஏனையவர்கள் எல்லாம் எம்மை விட நன்றாக வாழ்கின்றார்கள். எமக்கு இல்லாத விடயங்கள் அவர்களிடம் உள்ளன. நாம் இருநூறு வருட துன்பத்தையே நாம் இங்கு சொல்கின்றோம்'

யுவராஜின் இந்த பேச்சுக்கு அவர்களிடையே ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்பிய எம். பிரதீபன் வலிமை சேர்க்கிறார். 'உண்மையில் இவர்கள் அனைவரும் அவர்களின் உழைப்பைப் பற்றியே சொன்னார்கள். இவ்வனைவரும் வாழ்வதற்காக உழைத்தவர்கள். கமராவைக் கண்டிராதவர்களுக்கு போட்டோ பிடிக்கக் கற்றுக் கொடுத்தது அல்ல கதை. தோற்றுவிக்கப்பட்ட விடயம். தோட்ட எஜமானர்கள் கதிரேசன் கோவிலை நோக்கி ஏதோவொரு எக்சிபிஷனைப் பார்க்க வருகிறோம் என்ற சரளமான கருத்துடனேயே வந்தார்கள். ஆனால் இதனைப் பார்த்த அவர்கள் அதிர்ச்சிக்கு ஆளானார்கள். இப்போது அனைவர் முன்னாலும் ஆழமான குழி பறிக்கப்பட்டிருப்பதைப் போலிருந்தது. குழியை எட்டிப் பார்க்கின்ற போது மக்கள் அதில் வீழ்ந்திருந்தார்கள். அதுதான் இதன் தாக்கம். இன்னொரு வகையில் நாம் அங்கீகாரமில்லாத மனிதர்களின் பிள்ளைகளுக்கு அங்கீகாரம் அளித்தோம்.' அவர் எதிர்காலம் பற்றிய நோக்குடன் குறிப்பிடுகின்றார்.

'இந்தப் புகைப்படங்களைப் பார்வையிட வந்த ஜீவன் தொண்டமானும் அதிர்ச்சியடைந்தார். அவர் சர்வதேசத் தரம்வாய்ந்த புகைப்படங்களும் காணப்படுகின்ற ஒரு நிகழ்வெனக் குறிப்பிட்டார். உதவி செய்வதாகவும் குறிப்பிட்டார். ஆனால் கமரா இல்லாதவர்களுக்கு கமரா வாங்கிக் கொடுப்பது மட்டும் அரசியல்வாதிகளின் உதவியாக இருக்கக் கூடாது. அதனூடா வாழ்க்கைப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும். 'அது புகைப்பட உரிமையாளர்களின் கண்களின் உணர்வு'. இப்போது அவர்களிடம் கமரா இல்லாவிட்டாலும் அவர்களிடம் ஒரு கருத்து உள்ளது. கருத்தும் வெல்ல வேண்டிய போராட்டமும் உள்ளது. அவ்வுணர்வுகள் அதனைத் தான் சொல்லுகின்றன. அதனை நீங்களும் பார்வையிடலாம். அந்த உணர்வுகளுடன் ஒன்றிவிடவும் முடியும்.

**ஊடகவியலாளர் லசந்த த சில்வா**
**அநித்தா பத்திரிகை /30.08.2020**

# உங்கள்
## தேநீர் கோப்பையில் கண்ணீர்

பல தசாப்த காலமாக இலங்கையானது இந்து சமுத்திரத்தில் அமையப்பெற்ற ஒரு தீவாக பிரசித்தி பெறக் காரணம் அதன் எழில், அமைதி என்பவற்றுடன் நாட்டின் உற்பத்தி செய்யப்படும் தேயிலையும் ஆகும். ஒரு தீவு என்றவகையில் நாட்டின் பொருளாதார முதுகெழும்பாக விளங்கிய தேயிலைக் கைத்தொழிற்துறையின் அடித்தளமானது பல தசாப்த காலத்திற்கு முன்னதாக பிரித்தானியரால் அடிமைகளுக்கு சமமான வகையில் இந்நாட்டுக்கு அழைத்து வரப்பட்டவர்களின் பரம்பரையினராக வாழ்ந்து வரும் இந்திய வம்சாவளி மக்களாகிய தமிழ் தொழிலாளர் படையணியின் மூலமாகவே உருவாக்கப்பட்டிருந்தது. வாழ்க்கை மட்டம், அபிவிருத்தி மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் மேற்படி சமூகத்தினர் நீண்ட காலமாக பின்னடைவான நிலையிலேயே வாழ்ந்து வருவதுடன் தற்போதைய சூழ்நிலையிலும் அவர்கள் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

'தேயிலைச் சாயம்' ஒரு மாறுபட்ட வகையிலான புகைப்படக் கண்காட்சியாகும். இதன் விசேடத்துவம் யாதெனில், தோட்டங்களைப் பற்றிய தொழில்வாண்மை மட்டத்திலான புகைப்படங்களை நமக்காக கொண்டு வந்தது நகரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கலைஞர்கள் அன்றி தோட்டத்துறையைச் சார்ந்த இளைஞர்களே என்பதாகும். இலங்கையின் தோட்டங்களில் போலியான அழகிற்குள் மறைந்து புதிய சவால்கள் மற்றும் வாழ்க்கையின் ஆளமான துன்பங்களுக்கு மேற்படி சமூகம் முகங்கொடுக்கும் விதம் தொடர்பிலான அவர்களது அனுபவங்களை எமக்கு விபரிக்கும் ஒரு விடயம் கண்காட்சியின் மூலமாக இடம்பெறுகிறது. தேயிலைக் கொழுந்தைப் பறித்தும், தோட்டங்களை பராமரித்தும் பாதுகாத்தும், அதன்

உற்பத்தி நடவடிக்கைகளை பேணிச் செல்கின்ற மலையக தமிழ் மக்கள், ஒட்டுமொத்த நாட்டின் பொருளாதாரத்தினை கட்டிக் காக்கின்ற அதேவேளை அத்தொழிற்துறையில் ஆகக் குறைந்த வசதிகளை அனுபவிக்கின்ற தரப்பினர் என்ற விடயம் இதன் மூலமாக எமக்கு சுட்டிக் காட்டப்படுகின்றது.

அபிவிருத்தி பற்றிய குறிகாட்டிகள் பலவற்றுக்கமைவாக மேற்படி சமூகத்தினரை இலங்கையின் ஏனைய தரப்பினருடன் ஒப்பிடுகையில் அவர்கள் இப்போதும் இருப்பது மிகவும் பின்தங்கிய ஒரு நிலைமையிலாகும். இலங்கையில் ஏனைய மக்களுக்கு உரித்தான அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட, நாட்டில் மிகக் குறைந்த சம்பளத்தினைப் பெறுகின்ற மேற்படி மக்களுக்கு அவர்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்ற ஒடுக்கமான மிகச் சிறிய லயன் அறைகளைக் கூட உரித்தாக்கிக் கொள்ளும் உரிமையைக் கூட அவர்கள் பெறவில்லை. ஒடுக்கப்பட்ட ஏனைய சமூகங்களைப் போன்றே தோட்டத்துறையிலும் வருமானம் மற்றும் உரிமை ஆகிய இரு துறையிலும் பெரிதும் பாதிக்கப்படுபவர்களாக விளங்குபவர்கள் பெண்களேயாவர்.

ஆகக் குறைந்த சம்பளமாக 1000 ரூபாவிற்கான (சுமார் 4 பிரித்தானிய பவுன்கள்) போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதோடு ஒரு நாளைக்கு 16 - 18 கிலோகிராம் தேயிலைக் கொழுந்து பறித்தெடுப்பதற்காக இப்போதும் ஒரு சில டொலர்களே வேதனமாக வழங்கப்படுவதும், எப்போதும் பெண்களுக்கு ஆண்களை விடவும் குறைந்த சம்பளம் வழங்கப்படும் நிலைக்கு மத்தியிலாகும். தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கின்ற கவனிப்பாரற்ற நிலைமைகள், காணி அல்லது சொத்துக்கள் கையகப்படுத்தலின் போது இடம்பெறுகின்ற அநீதிகள், தமது வீட்டுக்கென்று விலாசமொன்று இல்லாத நிலைமை போன்ற காரணிகளுடன் சுகாதாரம், போக்குவரத்து வசதிகள், அடிப்படை சுகாதாரம் போன்ற அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற பல்வேறான சேவைகள் தோட்ட முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சூழ்நிலையில் அர்த்தப்பாடுடைய பிரஜாவுரிமை என்பது தொடர்ச்சியாக கானல் நீராகவே மாறியுள்ளது. தோட்டங்களில் அதிகார சொரூபம் எந்தளவெனில், தோட்டத்திலிருந்து ஒரு நாடகத்தில் பங்கேற்க செல்வதற்குக் கூட தோட்ட முகாமைத்துவத்தின் அனுமதி மற்றும் இணக்கப்பாடு அவசியமாகும் விதமாக அந்த மனித வளங்கள் எஜமானுக்கு செந்தமானவையாக பேணுதல் என்பது நவீன யுகத்தின் அடிமைச் சேவை என்ற வகையிலாகும்.

'தேயிலைச் சாயம்' கண்காட்சியில் பயன்படுத்தப்பட்ட புகைப்படங்கள் மலையகத்தின் தெரிவு செய்யப்பட்ட நான்கு தோட்டங்களில் இருந்து 40 இளைஞர் யுவதிகளைக் கொண்டு எடுக்கப்பட்டவையாகும். அதாவது நுவரெலியா மாவட்டத்தின் ஹொலிறூட், லோஹி ஆகிய தோட்டங்களும் பதுளை மாவட்டத்தின் அட்டம்பிட்டிய மற்றும் ஊவா ஹைலண்ட்ஸ் ஆகிய

தோட்டங்களில் இருந்தாகும். ஆவர்களது கருத்துக்களை பயன்மிக்கதாக வெளிப்படுத்தும் வகையில் அதற்கான அடித்தளத்தினை பெற்றுக் கொடுப்பதற்காக புகைப்படத்துறை மற்றும் ஆக்கபூர்வமான புகைப்படக்குரல் எண்ணக்கரு பற்றிய தொழில்நுட்ப ரீதியான அறிவினை பயிற்சி அமர்வாக பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டத்தினை ஊவா சக்தி நிறுவனம் மேற்கொண்டு நடைமுறைப்படுத்தியது.

சமூக மாற்றத்திற்கான தொலைநோக்குடன் சமூக மற்றும் அரசியல் பின்னணி தொடர்பிலான மிகச் சிறந்த தெளிவினை பெறுவதற்காக சமூக கூருணர்வை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றிய இளைஞர்கள் அதற்கான பணியினை ஆரம்பித்தனர். இலங்கையில் உயிர்த்தஞாயிறு தாக்குதல் காரணமாகவும் அண்மையில் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாகவும் ஏற்பட்ட பாரதூரமான சவால்களுக்கு மத்தியில் ஒரு வருட காலமாக இந்த செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. ஊக்கம் நிறைந்த இளைஞர்கள் (அவர்களது பெற்றோரினதும் பாரிய பங்களிப்புடன்) தாங்களாகவே தமது கதைகளூடாக தமது சமூகத்திலிருந்து புகைப்படக் காட்சிகளை பெற்று காட்சிப்படுத்த வேண்டுமென்று திடசங்கற்பம் கொண்டனர்.

இந்த முயற்சியின் நோக்கமாக அமைந்த விடயம், சமூகத்தினுள் தமது நிலைமையை மிகச் சிறந்த சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு மாற்றியமைப்பதற்காக மலையக தமிழ் மக்கள் மத்தியில் ஓர் விவாதத்தினை கட்டியெழுப்ப ஆரம்பிப்பதாகும். அவர்கள் அவ்வாறானதொரு தொழிலை தெரிவு செய்வதற்கு விரும்புவார்களாயின், அதற்கென எதிர்காலத்தில் தோட்டங்களுக்குள்ளும் அதற்கு வெளியிலும் அவர்களுக்கு மிகச் சிறந்த வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடிய வகையில், தொழிற்துறை சார்ந்த புகைப்படத்துறைக்குரிய தகைமைகளைப் பெற்றுக் கொடுத்து இளைஞர் சமூகத்தினை வலுவூட்டுவது இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

தோட்டத் துறையில் புகைப்பட ஊடகத்துறையை வெளிக்கொணர்ந்த ‘தேயிலைச் சாயம்’ கண்காட்சி செப்டெம்பர் மாதம் 26 - 27 ஆகிய திகதிகளில் லயனல் வெண்ட் கலையகத்தில் நடைபெற்றது. கண்காட்சியும் பெருந்தோட்டத் துறையின் இளைஞர் யுவதிகளை வலுவூட்டும் வகையிலும் புகைப்படக்குரல் வெளிப்படுத்தல் மூலமாக தோட்டத்துறை மக்களது பிரச்சினைகள் தொடர்பிலான உரையாடலுக்கு கூடுதல் வாய்ப்பினை உருவாக்கும் ஒட்டுமொத்த கருத்திட்டத்திற்காகவும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வசதியளிப்பாளராக செயற்பட்ட அதேவேளை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜேர்மன் பெடரல் வெளிநாட்டு அலுவலகத்தினது கூட்டு நிதிப் பங்களிப்புடன் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமாகிய இலங்கையில் நல்லிணக்க செயற்பாட்டினை வலுவூட்டும் கூட்டுமுயற்சியுடன் (SRP) இணைந்தாகும்.

மலையக தமிழ் மக்களின் செயற்பாட்டுப் பங்களிப்புடன், பதுளை ஊவா சக்தி நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மற்றும் தமது தோட்டங்களில் செயலமர்வுகளை நடாத்துவதற்கு அனுமதி வழங்கியமை தொடக்கம் கண்காட்சியை நடாத்துவது வரையிலான சகல விடயங்களுக்கும் ஹொலிறூட், லோஹி, அட்டம்பிட்டிய மற்றும் ஊவா ஹைலண்ட்ஸ் ஆகிய தோட்டங்கள் வழங்கிய உதவிகள் மற்றும் பங்களிப்பும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றியடைவதற்கு ஏதுவாக அமைந்தன. புகைப்படக் கலை தொடர்பிலான தொழிற்றுறை சார்ந்த பயிற்சியினை பிரபல புகைப்படக் கலைஞர்களாகிய அஜித் செனெவிரத்ன மற்றும் நதிஷ்க ரணசிங்க ஆகியோர் வழங்கினர்.

**சந்திரிகா காடியவசம்**
**நதீஷா பவுலிஸ்**
**சுதந்திர ஊடகவியலாளர் மற்றும் எழுத்தாளர்**
Daily FT **பத்திரிகை** / 03.10.2020

# மலையகத்தின்
## மனச்சாட்சி

கடந்த 200 வருடங்களாக மலையக மக்களின் வாழ்வியல், உட்கட்டமைப்பு மற்றும் வாழ்விடங்களில் எவ்விதமான மாற்றங்களும் இடம்பெறவில்லையென்பதை உலகுக்கு உரைக்கும் வகையில் 'தேயிலைச்சாயம்' புகைப்படக் கண்காட்சி அமைந்திருந்தது. கொழும்பு 7, லயனல் வென்ட் கலை அரங்கில் இடம்பெற்ற 'தேயிலைச் சாயம்' புகைப்படக் கண்காட்சி பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட ஒருசில வீட்டுத்திட்டங்களின் மூலம் அவர்களுடைய வாழ்வியல் முற்றாக மாற்றப்பட்டுவிட்டது என்ற தீர்மானத்துக்கு வருவதானது தவறாகும். மேலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளே தங்களுடைய அவலங்களை புகைப்படங்களாக எமக்கு காட்சிப்படுத்தியிருக்கின்றமை நிகழ்வுக்கு உயிரோட்டம் கொடுத்திருக்கின்றது.

தேயிலைச்சாயம் எனப்படுவது இலங்கையில் பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலுள்ள இளைஞர் யுவதிகளின் தேசிய புகைப்பட கண்காட்சியாகும். இக்கண்காட்சி அதன் புகைப்படக் கலைஞர்களை உள்ளடக்கும் சமூகத்தின் கதையினை எம்மிடம் கொண்டு வருவதற்கு கமரா விழிகள் மூலம் அவர்களது உலகினை அனுபவிப்பதற்கும் மற்றும் எதிர்காலத்திற்கான அவர்களது எதிர்பார்ப்பினை எம்முடன் பகிர்ந்துகொள்வதற்கும் முன்னெடுக்கப்பட்ட முயற்சியொன்றாக இக்கண்காட்சி இருக்கின்ற அதேவேளை இப்புகைப்பட கண்காட்சியில் மலையகத்தின் இருண்ட பக்கங்கள் மாத்திரம் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அபிவிருத்திகள் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மறையான விமர்சனங்களையும் சமூகவலைத்தளங்களில் சந்தித்திருந்தது. விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனால் அவை ஆரோக்கியமானவையாக இருப்பதை விரும்புவதாக நிகழ்ச்சி ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. அத்துடன் இங்கு

புகைப்படங்களை காட்சிப்படுத்தியிருந்த இரு இளம் புகைப்பட கலைஞர்களுக்கு இலங்கையில் பிரசித்தி பெற்ற புகைப்படப்பிடிப்பாளர் டொமினிக் அந்தனியின் அலுவலகத்தில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. பல ஊடகங்களிலிருந்தும் பலருக்கு பணியாற்றுவதற்கான அழைப்பும் வந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த புகைப்படங்கள் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் அனுபவிக்கும் இன்னல்களையே காட்சிப்படுத்தியிருந்தது. இடவசதியில்லாத லயன் அறைகளில் கழியும் அவர்களுடைய வாழ்க்கையையும் தேயிலை நிறுவைக்கான தராசுகளை தொழிலாளர்கள் தங்களுடைய தலையில் சுமப்பதும், வசதியில்லாத வளங்களில்லாத வாழ்க்கையிலும் பெருந்தோட்ட சிறுவர்கள் புன்னகைத்து வாழ்வதும் எம்மை கடந்த காலங்களுக்குள் அழைத்துச் செல்வதாக இருக்கின்றது. மலசலகூடமும் சமையலறையும் ஒருங்கே அமைந்த இடத்தில் சமையல் நடப்பதும், பெற்றோர் தேயிலை கூடைகளுடன் செல்கையில் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் காட்சியும் வெற்று மதுபான போத்தலில் நிரப்பிய தேயிலைச்சாயத்தை தாய் அருந்துவதையும் தேயிலை மலைகளிலேயே வசதியற்ற நிலையில் அமர்ந்து உணவு உண்பதையும் வெளிப்படுத்தும் புகைப்படங்கள் எமது வாழ்க்கையில் வழக்கமாகிப்போன விடயங்களாகவே பார்க்க வேண்டியுள்ளது.

இங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்த புகைப்படங்கள் மலையக மக்களின் ஒரு சில பிரச்சினைகளின் வெளிப்பாடாகும். இன்னும் சொல்லமுடியாத எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. அவற்றையும் எதிர்காலத்தில் கமராக்களில் வெளிக்கொண்டு வரவேண்டும். அழிந்து வரும் எமது சமூக அடையாளங்களை தேடி பிடித்து பொருட்களாகவும் மருவிப்போன கூத்துக்கலைகளை காட்சிகளாகவும் கண்காட்சி வெளிப்படுத்தியிருந்தது.

தேசிய கலையரங்கில் மலையக மக்களின் பிரச்சினைகளை காட்சிப்படுத்தியிருப்பது முக்கியமான விடயம். மக்களின் வாழ்வியலை மொழியை கடந்த புகைப்பட காட்சியானது சகலரும் புரிந்து கொள்ளக்கூடியது. புகைப்படங்களிலுள்ள மக்களின் முகங்களிலுள்ள ரேகைகள் எமக்கு பல விடயங்களை சொல்கின்றது. கலைஞர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூகத்தினரும் கூட தங்களுடைய மொழியில் வெளிப்படுத்த முற்படுகின்றனர். புகைப்படம் என்பதே ஒரு மொழியாகும். அதனை வெளிப்படுத்த சிவில் சமூகங்கள் முயற்சிக்க வேண்டும். இது ஒடுக்கப்பட்ட மக்களின் காட்சிப்படுத்தலாகவே நான் பார்க்கிறேன் என நிகழ்வில் கலந்து கொண்டிருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்திருந்தார்.

18 மாத பயிற்சியின் பின்பு இளம் புகைப்பட கலைஞர்களினால் அவர்களது முதலாவது கண்காட்சி தேயிலைச் சாயம் என நுவரெலியாவில் 2020 ஆகஸ்ட் 23 நடைபெற்றதோடு ஆகஸ்ட் 29

மற்றும் செர்டெம்பர் 14, 15 ஆம் திகதிகளில் பதுளை நகரில் நடைபெற்றது. நிஜவாழ்க்கையில் அவர்களுடன் நேரடியாக தொடர்புபட்ட அம்சங்களை அவர்களின் கமராவுக்குள் உள்வாங்கி எமக்கு அளித்திருக்கின்றார்கள். இந்த புகைப்படங்கள் ஒவ்வொன்றும் எமக்கு செய்தியை பிரதிபலித்து காட்டுகின்றது. நமது சமூகம் இன்னும் எவ்வளவு பின்தங்கியிருக்கின்றது என்பதை ஆதாரத்துடன் வெளிப்படுத்தியிருக்கின்றது. இதுவே பெருந்தோட்ட மக்களின் இன்றைய நிலை அவற்றில் மாற்றங்களை கொண்டுவருவதே எமது தேவை. அதனை நிறைவேற்றுவதே இந்த சமூகத்தின் பாரிய பொறுப்பும் கூட.

இந்த புகைப்பட காட்சிகளை நாங்கள் ஒரு வருடங்களாக முயற்சித்து பெற்றுக் கொண்டிருக்கின்றோம். மலையக மக்களின் வாழ்வாதாரத்தை வெளிப்படுத்தும் வகையிலேயே இப்புகைப்படங்களை நாங்கள் பெற்றுள்ளோம். இரு குழுக்களாக பிரிந்து 40 புகைப்படக்கலைஞர்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட 40 ஆயிரம் புகைப்படங்களில் மிகச்சிறந்த நூறை இங்கு காட்சிப்படுத்தியிருக்கின்றோம். என இளம் புகைப்படவியலாளர் தனது கருத்தை பதிவு செய்திருந்தார்.

கடந்த இரண்டு வருடங்களாக தனது சமூகத்தின் அவலங்களை வெளிக்கொண்டு வருவதற்காக கலைஞர்கள் பாடுபட்டிருக்கின்றார்கள். வெறுமனே இவை காட்சிகளாக இருப்பதில்லை. அவற்றையும் தாண்டி மக்களின் வாழ்க்கையை எம்முள்ளே விதைப்பவையாக இருக்கின்றன. அந்த விதைகள் எதிர்காலத்தில் விருட்சமாக வேண்டுமென்பதே பலரின் எதிர்பார்ப்பு. எமது சமூகத்தின் அவலங்களை நாமே வெளிக்கொண்டுவரவேண்டிய தேவை தற்போது எழுந்துள்ளது.

கடந்த 200 வருடங்களாக மலையக மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கின்றார்கள். எனவே அவர்களுடைய பிரச்சினைகளை புகைப்படங்கள் மூலம் எவ்வாறு தீர்த்துக்கொள்வது என்பதாகவே இந்த கண்காட்சி அமைந்திருக்கின்றது. குறிப்பாக கொழும்பு வாழ் இளைஞர் யுவதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் மலையக மக்களுடைய பிரச்சினைகளினை பல வடிவங்களில் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். எங்களுடைய பிரச்சினைகளை, உண்மையான நிலவரங்களை சகோதர இனத்துக்கு வெளிப்படுத்துவதே எமது பிரதான நோக்கம். மலையகத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்ட அபிவிருத்தியை காட்சிப்படுத்துவதால் நாங்கள் அரசியலுக்கு விளம்பரம் கொடுப்பதாக அமையும். சிலர் இப்புகைப்படங்கள் எந்த காலத்துக்குரியது என கேட்குமளவுக்கு நாங்கள் பின் தங்கியிருக்கின்றோம். இந்த புகைப்படங்களை மலையகத்திலுள்ளவர்களிடம் கொண்டு செல்லும்போது அவர்கள் இதைவிடவும் மோசமான பகுதிகளுக்கு எங்களை அழைத்துச் செல்ல காத்திருக்கின்றார்கள். அவ்வாறெனின் இதைவிடவும் இருண்ட யுகம் மலையகத்தில் இருப்பதை

உணர முடிகின்றது. மலையகத்தின் ஒருபகுதியை மாத்திரம் பார்த்துவிட்டு அபிவிருத்தி என்று கூறுவது தவறு. ஒரு சிலருக்கு அதிகம் விமர்சிக்க மாத்திரமே தெரியும். எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் எங்களுடைய முயற்சி தொடர்ந்து கொண்டே இருக்கும். என நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பிரதீபன் தெரிவித்திருந்தார்.

கடந்த 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் கொழும்பில் இடம்பெற்ற இக் கண்காட்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜெர்மன் சமஷ்டி வெளிநாட்டு அலுவலகத்தின் மூலம் கூட்டுநிதி அனுசரணையினை பெற்றுக்கொடுக்கும் இலங்கையின் நல்லிணக்க செயல்பாடுகளை வலுவூட்டும் இச் செயல்திட்டத்திற்கு ஊவா சக்தி நிறுவனம் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றமை இங்கு விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

தேயிலைச் சாயம் புகைப்படக் கண்காட்சி

**கே. பிரசன்னா**

**ஊடகவியலாளர்**

**உதயசூரியன் பத்திரிகை 01.10.2020**

தேயிலைச் சாயம்

# அன்பின் பின்புலக் கதை

இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்னர் நானும் எனது குழுவினரும் பல நாட்களாக மலையகத்தின் நான்கு தோட்டங்களுக்குள் காலடித் தடம் பதித்தது, அங்கு ஏதாவது புதியதொரு செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனாகும். அதற்கான ஆரம்பமே இளம் யுவதிகள் மற்றும் இளைஞர்கள் சிலரை அடையாளம் கண்டு கொண்டமை. முன்னறிவித்தல் வழங்கப்பட்டிருந்த காரணத்தினாலும் தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்காக ஆரம்பிக்கப்படவுள்ள புகைப்படக் கலை பாடநெறிக்கு அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ளல் என்ற செய்தி பரவியிருந்த காரணத்தாலும் பெரும்பாலானவர்கள் அவ்விடத்திற்கு வருகை தந்திருந்தனர். தலவாக்கலை ஹொலிரூட் மற்றும் லோகி ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளும் பதுளை ஊவா ஹைலண்ட்ஸ் மற்றும் அட்டம்பிட்டிய ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுமே அதிகமாக வருகை தந்திருந்தனர். சான்றிதழ்கள், பதக்கங்கள் உட்பட பல்வேறான தமது திறமைகளை உள்ளடக்கிய ஆவணக் கோப்புகளைக் அணைத்துக் கொண்டவாறு அவர்கள் அங்கிருந்தனர். பின்னர் ஒரு தோட்டத்திலிருந்து பத்து அங்கத்தவர்கள் என்ற ரீதியில் நான்கு தோட்டங்களையும் பிரதிநிதித்தவம் செய்து நாற்பது இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டனர். ‘தேயிலைச் சாயம்’ கண்காட்சித் தொடரின் ஆரம்பம் இவ்வாறு உருவாகியது.

வாழ்க்கையில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் டிஜிட்டல் கமராவைக் கண்டிருக்காத, தொட்டுக் கூட பார்த்திருக்காத அந்த இளம் குழுவினர் நாட்டின் பல பாகங்களிலும் கொழும்பு லயனல் வெண்ட்

போன்ற பிரசித்தி பெற்ற கலையகத்திலும் அவர்களது புகைப்படக் கண்காட்சியை நடாத்துவார்கள் என்று கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார்கள். நீங்கள் கனவு காண்பதை எப்போது நிறுத்துகிறீர்களோ அப்போது நீங்கள் முதுமை அடைகிறீர்கள் என பிரேசில் நாட்டின் பிரபல எழுத்தாளர் பாவுலோ கோய்லோ தெரிவித்த கருத்தினை இளைஞர் யுவதிகளுடன் கதைக்கின்ற சந்தர்ப்பத்தில் நாம் தெரிவித்தது, எதனையும் வெற்றிகரமாக மேற்கொள்ள வேண்டுமெனில் நாம் அதற்கென தொடர்ச்சியாக கனவு காண வேண்டுமென்று கூறிய ஆரம்ப வேளையிலாகும். பல்வேறான இன்னல்கள் கஸ்டங்களுக்கு மத்தியிலும் கூட அவர்கள் அவர்களது கனவுகளுக்காக கடுமையாக பாடுபட்டனர்.

புகைப்படத்துறை, கலை மற்றும் சமூக மாற்றத்திற்காக கலையை பயன்படுத்துதல், முரண்பாடு மற்றும் முரண்பாட்டு பகுப்பாய்வு போன்ற இன்னோரான விடயங்கள் பற்றிய அறிவினை நாம் அவர்களுடன் பகிர்ந்து கொண்டோம். அதனூடாக அவர்களது சமூக மற்றும் அரசியல் சார்ந்த தெளிவினை உருவாக்கும் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. இறுதியில் சமூக பொறுப்புடைய ஓர் பிரஜையாகவோ, இளைஞனாகவோ, யுவதியாகவோ அல்லது புகைப்படக் கலைஞனாகவோ எங்களால் என்ன செய்ய முடியும்? நாம் செய்ய வேண்டியது யாது? என்பது தொடர்பிலான சினேகபூர்வ கலந்துரையாடலைத் தொடர்ந்து தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மலையக தமிழ் மக்கள் பற்றியதான சமூகத்தினர் அறியாத கதையை புகைப்படங்கள் வாயிலாக சமூகத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென அவர்களாகவே ஏகமனதுடன் தீர்மானம் ஒன்றினை மேற்கொண்டனர். 'சிலோன் ரீ' என்ற பிரசித்தி பெற்ற நற்பெயருடன் உலகம் இலங்கையை அடையாளம் கண்டு கொண்ட போதிலும் அத் தேயிலை உற்பத்தி நடவடிக்கையின் பொருட்டு உழைப்பை வழங்கும் அந்த மக்கள் தொடர்பில் இலங்கை சமூகத்தினர் மத்தியில் காணப்படும் கலந்துரையாடல் யாது? இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் அவர்களுக்கு உரித்தான இடம் கிடைத்துள்ளதா? நாம் மலையக இளைஞர் யுவதிகளுடன் இணைந்து அவர்களது கதையை 'தேயிலைச் சாயம்' புகைப்படக் கண்காட்சியினூடாக உலகிற்கு எடுத்துரைக்கும் பணியினை நாம் இந்த வகையில் ஆரம்பித்தோம்.

இதுவரையில் 'தேயிலைச் சாயம்' பற்றி அறிந்திராத ஒருவர் அறிந்து கொள்வதற்காகவே இந்த விளக்கத்தினை வழங்கினோம்.

### இப்போது நாம் நிகழ்காலத்திற்குள் பிரவேசிப்போம்.

வேதனைகளைக் காண்பித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமா? அம்மக்களது பிரச்சினைகளை புகைப்படம் எடுப்பதால் என்னதான் நடக்கப் போகிறது? இதுவும் ஒரு செயற்திட்டம் மாத்திரமே. கவலைகளை மாத்திரமே காண்பிக்கின்றனர், இந்த சமூகத்திற்கு அபிவிருத்தி என்ற எதுவுமே இடம்பெறவில்லையா? தோட்டங்களில் மக்களது அபிவிருத்தியை காண்பிக்கவில்லையே? இது போன்ற கருத்துக்கள் கதைகள் கண்காட்சியை நடாத்தும்

வேளையில் எமக்கு கிடைக்கப்பெற்றவையாகும். சிங்கள சமூகத்தைப் போன்றே தமிழ் சமூகத்திலும் இவ்வகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அது உண்மைதான். பிரச்சினைகளை புகைப்படமாக்கிய மாத்திரத்தில் அவை தீர்ந்துவிடாது என்பதனை நாம் அறிவோம். இந்நாட்டுப் பிரஜைகள் என்றவகையில் இருநூறு வருடங்களாக முகங் கொடுத்துவரும் பல பிரச்சினைகளை ஓரிரவில் தீர்த்து வைக்கும் அளவிற்கு இது போதுமானதாக இல்லை என்பதையும் நாம் அறிவோம். அப்படியொரு திருவிளையாடலை செய்யும் சர்வ வல்லமை கொண்ட கடவுளுக்கு இணையான அதிகாரம் எங்களிடம் இல்லை. கடவுளின் பார்வை எதுவாக இருந்தாலும் தேர்தலினூடாக மக்களது இறையாண்மை அதிகாரத்தினைப் பெற்றுக்கொடுத்து பிரஜைகள் மூலமாகவே நியமிக்கப்பட்ட ஒரு தரப்பினர் பாராளுமன்றத்தினையும் அரசாங்கத்தினையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற அதேவேளை, இந்தப் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் படிப்படியாக தீர்த்து வைப்பதற்கான ஆரம்பத்தினை அவர்களால் செய்ய முடியுமென்பதை நாம் நன்கறிவோம்.

தலவாக்கலை மற்றும் பதுளை கண்காட்சிகளைத் தொடர்ந்து இடம்பெற்ற விவாதங்களின் போது பெரும்பாலான தரப்பினரின் குற்றச்சாட்டாக அமைந்தது அவர்களது அபிவிருத்தி பற்றிய விடயங்களை புகைப்படங்கள் வாயிலாக காண்பிக்காமை தொடர்பிலாகும். கொழும்பில் இடம்பெற்ற கண்காட்சியின் போதும் இந்த பிரச்சினை எழுந்தது. அதன்போது இந்த புகைப்படக் கண்காட்சியின் ஓர் உறுப்பினராக பணியாற்றிய இளம் ஆசிரியையாகிய ஸ்ரீ தேவி அளித்த பதிலை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் அபிவிருத்தி எனக் கருதுவது எதனை? மலையக அரசியல்வாதிகளும் தோட்டத்தில் பிறந்து தோட்டத்தை விட்டுச் சென்றவர்களுமே அடிக்கடி கூறி வருகின்றனர் தோட்டங்கள் அபிவிருத்தி அடைந்துவிட்டன என்று. தோட்டங்களில் உள்ள உண்மை நிலையை கூறுவதற்கு அவர்களுக்கு வெட்கமாக இருக்கலாம். இந்த கண்காட்சியில் இருப்பதோ நாங்கள் தோட்டங்கள் தோறும் செல்லும் போது கண்ட உண்மையான பிரச்சினைகளே. இன்றும் தோட்டங்களில் எமது மக்கள் முகம் கொடுக்கும் உண்மையான பிரச்சினைகளையே. மாறாக இவை நாம் திரிபுபடுத்திய புகைப்படங்கள் அல்ல. ஒருவர் பெற்ற வெற்றி ஒட்டுமொத்த சமூகத்தின் வெற்றியாக அமைந்து விட முடியுமா? எமது தேவை இந்த பிரச்சினைகளை மீண்டும் மீண்டும் காண்பிப்பதல்ல. மாறாக அவற்றை இல்லாது செய்வது என்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றினை அமைப்பதாகும். அதற்காக வெளியில் மக்களை தெளிவுபடுத்துவதேயாகும்.

உண்மையில் மலையக தமிழ் மக்கள் பெற்றுள்ள அபிவிருத்தி தான் என்ன? அரச சார்பற்ற நிறுவனமொன்று யாதேனும் வேலைத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்திய மாத்திரத்திலோ அல்லது தோட்ட நிர்வாகம் பாதையொன்றினை அமைத்துத் தந்த மாத்திரத்திலோ அதுவே அபிவிருத்தி எனத் தெரிவித்து கைகழுவி விட முடியுமா? அது மட்டுமா முகவரி ஒன்று இல்லாமல்

இந்த மக்கள் முகம் கொடுக்கும் துன்பங்களை வெளியில் உள்ள யார் அறிவார்கள்? இதைப் பற்றி பக்கம் பக்கமாக எழுத பேச இருந்த போதிலும் இந்த சந்தர்ப்பம் அதற்கான ஒன்றல்ல.

எனவே மேற்படி பிரச்சினைகளை சமூகமயப்படுத்துவது மாத்திரமே இந்த இளைஞர் யுவதிகளின் இன்றைய முயற்சியாக உள்ளது. சமூக புரட்சிகள் என்பது ஓரிரவில் இடம்பெற்றவையல்ல. இன்றைய நிலையில் பிரஜைகளாக நாம் அனுபவிக்கின்ற சில வரப்பிரசாதங்கள் ஓரிரவில் கிடைக்கப்பெற்றவையோ அல்லது தங்கத் தட்டில் வைத்தோ அளிக்கப்பட்டவையுமல்ல. பல போராட்டங்களை நடாத்தியும், இரத்தத்தையும் கண்ணீரையும் சிந்தியும் மக்கள் நீண்டகாலமாக செய்த போராட்ட உழைப்பின் பிரதிபலனேயாகும். இன்று நாம் அனுபவிக்கின்ற சில வரப்பிரசாதங்களை சிலவேளை அவர்கள் அனுபவித்துக் கூட இருக்க மாட்டார்கள். எனவே இந்த முயற்சி சமூகத்தில் ஓர் உரையாடலை ஏற்படுத்துவதற்காக சமூகத்தினை தெளிவுபடுத்தும் ஓர் ஆரம்பம் மாத்திரமே.

வீதியில் இறங்கி பதாகைகளை ஏந்தி இதற்காக போராடும் போராட்டம் இன்றளவிலும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கின்றது. அந்த போராட்டம் அவசியமானதே. அதற்காக கலையை பயன்படுத்தி அப்போராட்டம் தொடர்பிலான தெளிவுபடுத்தலை மேற்கொள்வது எவ்வாறென்ற ஒரு ஒத்திகையாகவே இந்த கண்காட்சி இடம்பெறுகிறது. வன்முறையற்ற விதமாக சமூக பிரச்சினைகள் தொடர்பிலான கலந்துரையாடலை ஆரம்பிப்பது எவ்வாறு? அஹிம்சை வழியிலான நேரடி அணுகுமுறைகளை (nonviolence direct actions) எவ்வாறு பின்பற்றுவது? அதற்கென மனப்பாங்கிலான மாற்றங்களை ஏற்படுத்தவது எவ்வாறு? என்பது பற்றியதே இந்த புகைப்படக் கண்காட்சியின் பின்புலத்தில் காணப்படுகின்ற மற்றும் வெளியில் தெரியாத கலந்துரையாடலாகும்.

அதேவேளை மலையக மக்களைப் பற்றியதான கவிதைகள், பாடல்கள் என பலவும் எழுதப்பட்டுள்ளதென்பது உண்மைதான். அவற்றுள் சில உண்மையானவை அல்ல. ஒரு சமூகப் பிரிவினர் மீது அனுதாபம் கொண்டு அவர்களை கட்டியெழுப்புவதல்லாமல், அச்சமூகப் பிரிவினருக்கு சமூக அரசியல் மறுசீரமைப்பினை மேற்கொள்வதற்கான உருவாக்கத்தினை மேற்கொள்ள வேண்டுமென அமெரிக்கப் பேராசிரியர் மார்த்தா நுஸ்பாம் தெரிவிக்கின்றார். கலை வடிவில் இந்த புகைப்பட விமர்சனத்தினை மேற்கொள்வதிலும் பார்க்க ஒளியூடகம் மூலமாக அவ்வாறான சமூக உரையாடலை எவ்வாறு உருவாக்குவது என்ற கலந்துரையாடலே ‘தேயிலைச் சாயம்’ நிகழ்வில் உள்ளடங்கியுள்ளது.

இங்கு சில புகைப்படங்களில் கலை ரீதியாக குறைபாடுகள் காணப்படலாம். கலை விமர்சனத்தின் போது இது அனுபவிமில்லாத கலைஞரின் புகைப்படமா அவர்கள் கமராவை தொட்டுக் கூடப் பார்க்கவில்லையா என்ற விடயங்கள் அவசியமன்று. எனினும் இந்த புகைப்படங்கள் மூலமாக சமூகத் தெளிவு கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளது என்பதனை பல்வேறான விடயங்களூடாக புரிந்து கொள்ள முடியும். சில தேயிலைக் கம்பனிகள் இந்த புகைப்படக் கண்காட்சியில் காண்பிக்கப்பட்ட மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையை அவதானிப்பதற்கு

சென்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. சில நிறுவனங்கள் இது தொடர்பில் தெளிவுடன் எம்முடன் கலந்துரையாடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இப்போது பற்பல சமூக குழுக்கள், அரசியல் இயக்கங்களும் இந்த விடயம் தொடர்பாக ஆர்வத்துடன் கவனம் செலுத்தி செயற்படுகின்ற நிலைமையினைக் காணக்கூடியதாகவுள்ளது. மட்டுமன்றி சமூக ஊடகங்கள் வாயிலாக 'தேயிலைச் சாயம்' பற்றி தெளிவு பெற்ற பெரும்பாலான தரப்பினர் நாட்டின் சகல பிரதேசங்களிலும் இதனை காண்பிக்குமாறு எம்மிடம் வேண்டுகோள் முன்வைத்தனர் அதன் பெறுமதியையும் விளக்கியவாறே. எனவே இந்த ஆரம்பம் போதுமானதாக இல்லையா?

இதுவரையில் விடயங்களைக் கூறியது 'தேயிலைச் சாயம்' அபாராம் என்று கூறுவதற்காகவல்ல. இந்த இளைஞர் யுவதிகளின் முயற்சிக்கு மதிப்பளிப்பதற்காகவே. இந்த ஒட்டுமொத்த செயற்பாட்டுக்கு பங்களித்தவர்கள் ஏராளம். அதன் முதன்மைப் பங்காளர்கள் மலையக சமூகம் மற்றும் இதன் இளைஞர் யுவதிகளாவர். இளைஞர் யுவதிகள் வசிக்கும் தோட்டங்களின் முகாமைத்துவம் வழங்கிய ஒத்துழைப்பினை அளவிட முடியாது. SRP நிகழ்ச்சித் திட்டம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஊவா சக்தி நிறுவனம் மற்றும் சுவ சக்தி நிறுவனம் ஆகியன நிறுவன ரீதியாக தமது பங்களிப்பினை இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கியிருந்த அதேவேளை, அஜித் செனவிரத்ன மற்றும் நதிஸ்க ரணசிங்ஹ ஆகிய பிரபல கலைஞர்கள் அவர்களது உச்சகட்ட பங்களிப்பினை இதற்காக பெற்றுக் கொடுத்தனர். இதற்கு மேலும் இந்த புகைப்படங்களிற்கு பின்னால், ஒட்டுமொத்த செயற்பாட்டுக்காக உழைப்பினை நல்கியிருந்த தரப்பினரும் ஏராளம். அவ்வனைத்து தரப்பினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வது இது எமது சகோதர உறவுகளுக்காக செய்த காலத்தின் தேவை கருதி மேற்கொண்ட ஒரு பணியென்ற காரணத்தினாலாகும்.

அத்துடன் பேராசிரியர் சசங்க பெரேரா அவர்களது 'தேயிலைச் சாயம்' பற்றிய குறிப்பிலிருந்து மேற்கோள் காட்டி நான் குறிப்பிடுவது, இந்த புகைப்படத்தின் வாயிலாக மலையக சமூகம் தொடர்பான விவாதத்திற்கு ஆரம்பத்தினைப் பெற்றுக் கொடுக்கும் ஓர் ஊக்கத்திற்காகவே.

இந்த சமூகத்தினர் பற்றியதாக நான் கண்ட மிகவும் பலமான புகைப்படத் தொகுப்பு இதுவென்பதே எனது நம்பிக்கையாகும். உண்மையில் இந்த மக்கள் பற்றியதாக நான் கண்ணுற்ற அல்லது நான் வாசித்த பலம்வாய்ந்த கலந்துரையாடல்களுள் ஒன்று இதுவாகும்.

இறுதியாக 'தேயிலைச் சாயம்' என்பது வெறுமனே புகைப்படக் கண்காட்சியன்று, மாறாக அன்பு மற்றும் மனிதாபிமானம் பற்றிய ஓர் கதையென குறித்து வைக்க விரும்புகிறேன்.

**– லஹிரு கிதலகம**
ஆய்வாளர், எழுத்தாளர்
சமபிம பத்திரிகை /Samabima.com 21-01-2021





புகைப்படம் எடுத்தல் தொடர்பான செயலமர்வின் சந்தர்ப்பங்கள்





புகைப்படம் எடுத்தல் தொடர்பான செயலமர்வின் சந்தர்ப்பங்கள்





கிராமப்புறங்களில் நடந்து சென்று புகைப்படம் எடுத்தலில் ஈடுபடல்






கிராமப்புறங்களில் நடந்து சென்று புகைப்படம் எடுத்தலில் ஈடுபடல்





கிராமப்புறங்களில் நடந்து சென்று புகைப்படம் எடுத்தலில் ஈடுபடல்





மோதல் பகுப்பாய்வு தொடர்பான செயலமர்வின் சந்தர்ப்பங்கள்





கண்காட்சிகளுக்குத் தயாராகுதல்





கண்காட்சிகளுக்குத் தயாராகுதல்

























# கருத்துத் துளிகள்




















CPA Publication

